# உதயன்

விலை ரூபா 6-00

உடர்:1 ௦வள்ளுவர் ஆண்டு2029 வைகாசி 19(02-06-1998) செவ்வாய்க்கிழமை UTHAYAN – A Lively National Tamil Daily கதிர்:159


# வன்னியில் நேற்று மோதல் தணிந்தது!

## எனினும் ஷெல் தாக்குதல்கள் நீடிப்பு

வவுனியா, ஜூன் 2

மாங்குளம் நகரைக் கைப்பற்றும் நோக்கில் நகர்வை மேற்கொண்டுள்ள ''வெற்றி உறுதி'' படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடந்த நான்கு நாள்களாக இடம்பெற்று வந்த கடும் மோதல்கள் நேற்றுத் தணிந்திருந்ததாக வவுனியாவுக்குக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. எனினும் இரு தரப்பினரும் மாறி மாறி ஷெல் தாக்குதலில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா — யாழ்ப்பாணம் வரையிலான நெடுஞ்சாலையைக் கைப்பற்றும் நோக்கில் கடந்த ஒருவருடமாக இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் 'வெற்றி உறுதி' இராணுவத்தினர் மாங்குளம் நகரைக் கைப்பற்றும் நோக்கில் கடந்த வியாழக்கிழமை பெரும் படைநகர்வு ஒன்றை ஆரம்பித்திருந்தனர்.

ஒலுமடுவில் இருந்தும், அம்பகாமம் பகுதியில் இருந்தும் முன்னேறிய படையினர் மாங்குளம் நகரைக் கைப்பற்றக் கடும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு அரண்கள் மீது விளாங்குளத்தில் தாக்குதல்

கொழும்பு, ஜூன் 2

வன்னிவிளாங்குளத்தில் பாதுகாப்பு அரண்களில் கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் மீது விடுதலைப்புலிகள் நேற்று முன்தினம் பிற்பகலில் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

படையினர் திருப்பித் தாக்கியதில் விடுதலைப்புலிகள் அங்கிருந்து அகன்று சென்றுவிட்டனர் என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை தலைமையகம் தெரிவித்தது.

(இ-9)

## குடாநாட்டில் நேற்று கறுப்பு தினம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம் ஜூன் 2

யாழ். நூலகம் எரித்து அழிக்கப்பட்ட தினமான நேற்றைய தினத்தை புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பினர் கூட்டாக இணைந்து கறுப்பு தினமாக அனுஷ்டித்தனர்.

பாடசாலைகள், செயலகம், பல்கலைக்கழகம், அரச திணைக்களங்கள் ஆகியவற்றில் நேற்று கறுப்பு பட்டிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் புளொட் அமைப்பின் மாவட்ட அமைப்பாளரும் மாநகரசபை உறுப்பினருமான எஸ். கிருபைராஜா, ஈ.பி.ஆர்.எல்.எவ் யாழ். மாவட்ட அமைப்பாளரும் மாநகரசபை உறுப்பினருமான சுபத்திரன், மாநகரசபை உறுப்பினர்களான இருதயநாதன், ஜெயச்சந்திரன் மங்களநேசன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களிலும் இந்த அமைப்பினரால் கறுப்பு தினம் அனுட்டிக்கப்பட்டது.

## நீர்வேலி சந்தியில் குண்டு

யாழ்ப்பாணம், ஜூன் 2

நீர்வேலிச் சந்தியில் அனாதரவாகக் கிடந்த குண்டு ஒன்றைப் படையினர் நேற்றுக் காலை 10 மணியளவில் வெடிக்க வைத்தனர்.

குண்டு வெடிப்புச் சத்தத்தைப் பல மைல் தூரம் கேட்கக்கூடியதாகவிருந்தது.

## ஒருவர் களப்பலி என அறிவிப்பு

கடந்த 25 ஆம் திகதி வாகரைக் கடற்பரப்பில் கடற்படையினருடன் ஏற்பட்ட திடீர் மோதல் ஒன்றில் தமது தரப்பில் ஒருவர் களப்பலியானதாகப் புலிகள் நேற்று அறிவித்துள்ளனர்.

கப்டன் வீமன் (சிவமயன் ஜெயகாந்தன் — யாழ்ப்பாணம்) என்ற போராளியே களப்பலியானதாகப் புலிகளின் குரல் வானொலி தெரிவித்தது.

(இ-7)

# ஹட்டன் தேயிலைத் தொழிற்சாலை குண்டு வெடிப்பினால் பெரும் சேதம்!

## முகமூடியுடன் வந்தவர்கள் தப்பிச் சென்றனர்

கொழும்பு, ஜூன் 2

ஹட்டனில் உள்ள செனன் தோட்டத்தில் உள்ள தேயிலைத் தொழிற்சாலையில் வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்று வெடித்ததில் அத்தொழிற்சாலை பெரும் சேதத்துக்கு உள்ளானது.

நேற்று அதிகாலை 1-30 மணியளவில் முகமூடியுடன் வந்த இருவரே இந்தக் குண்டு வெடிப்புக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த இருவரும் தொழிற்சாலையைச் சுற்றி போடப்பட்டிருந்த பாதுகாப்பு முட்கம்பிகளை வெட்டிக்கொண்டு உள்ளே நுழைந்து குண்டை வைத்தார்கள் எனவும்—

அவர்களை அவதானித்த தோட்டப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அவர்களைத் துரத்திச் சென்ற போதிலும் அவர்கள் தப்பிச் சென்றுவிட்டார்கள் எனவும்—தெரிவிக்கப்படுகிறது.

இக் குண்டு வெடிப்பின் காரணமாக 35 லட்சம் ரூபா பெறுமதியான கட்டடங்களும், இயந்திரங்களும் சேதம் அடைந்துள்ளன என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

20 முதல் 25 கிலோ நிறையுடைய குண்டே இங்கு வெடிக்க வைக்கப்பட்டிருக்கலாம் என்றும்—

பொலிஸார் இக் குண்டு வெடிப்புத் தொடர்பாக மேலதிக விசாரணைகளை நடத்திவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இக் குண்டு வெடிப்பினைத் தொடர்ந்து ஹட்டன் பொலீஸார் தோட்டக் குடியிருப்புக்களில் தேடுதல் நடத்தி 50 க்கும் மேற்பட்ட இளைஞர்களை விசாரணைக்கு உட்படுத்தியதாகவும், இவர்களில் ஆறுபேர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(இ-21-9-7)

## களுவாஞ்சிக்குடி சம்பவம்: காவலாளிகள் கைது!

கொழும்பு, ஜூன் 2

கடந்த சனிக்கிழமை களுவாஞ்சிக்குடி தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக தொலைத் தொடர்பு நிலையத்தைச் சேர்ந்த காவலாளிகள் இருவர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு நீதிமன்றில் நேற்று ஆஜர்செய்யப்பட்டனர்.

எம். நடேசன் (பெரிய கல்லாறு), எல். தில்லேஸ்வரன் (எருவில்) ஆகியோரே பொலீஸாரால் கைது செய்யப்பட்டவர்கள் ஆவர்.

மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி ஜே. விஸ்வநாதன் முன்னிலையில் இவர்கள் ஆஜர் செய்யப்பட்டபோது நீதிவான் இவர்களை எதிர்வரும் 14 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்கு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மூதூரில் மோதல்

மட்டக்களப்பு, ஜூன் 2

திருகோணமலை மாவட்டம் மூதூர் கட்டைப்பறிச்சானில் நேற்றுமுன்தினம் இரவு விடுதலைப் புலிகளுக்கும் பொலீஸாருக்கும் இடையில் மோதல் இடம்பெற்றது.

இம்மோதலில் ஒரு விடுதலைப் புலி உறுப்பினர் உயிரிழந்தார் என்றும் —

அவரது சடலமும் ரி56 ரக துப்பாக்கியும் பொலீஸாரால் மீட்கப்பட்டன என்றும் —

ஓர் ஊர்காவல் படைவீரர் காயமடைந்துள்ளார் எனவும் பொலீஸார் தெரிவித்தனர்.

(இ-21)

## காணாமற்போன ஊர்காவலர்கள் சடலங்களாக மீட்பு

மட்டக்களப்பு, ஜூன் 2

அம்பாறை மாவட்டம் தம்பிட்டியில் விடுதலைப் புலிகளின் தாக்குதலை அடுத்து காணாமல் போன இரு ஊர்

( 10 ஆம் பக்கம் பார்க்க)

# வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவர் நிபந்தனைவிதித்துகூட்டணிக்குகடிதம்

## பதவி துறக்குமாறு கோருகிறார்

கொழும்பு, ஜூன் 2

'' நாட்டில் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட்டு தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அரசியல் தீர்வொன்றுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி அரசை வலியுறுத்த வேண்டும். இல்லையேல் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும், உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களும் பதவி துறக்க வேண்டும்.''

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த வலிகாமம் வடக்குப் பிரதேச சபைத் தலைவர் எஸ். ஸ்ரீபாஸ்கரன் தமிழர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் மீதான வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 2

அராலியில் 1997 ஜூலை 11ஆம் திகதி 17வயது மாணவி ஒருவர் படையினரால் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பான வழக்கு நேற்று மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட மாணவியின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி மு. சபாநாதன், ''இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர் ஒரு மாணவியாக இருப்பதால் பாடசாலைக்குச் செல்லாமல் நீதிமன்றத்தில் தனது காலத்தைக் கழிக்கிறார். இதனால் அவரது கல்வி பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இவ்வழக்கை விசேஷமாக விசாரிக்கவேண்டும்'' என்று கோரிக்கை விடுத்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓராண்டு நினைவஞ்சலியும் மதிய போசன அழைப்பும்

அமரர்

### அப்பையா ஜெயராசா

14-06-1997 அன்று சிவபதம் எய்திய அமரர் அப்பையா ஜெயராசா அவர்களின் திவசக் கிரியைகளிலும் மதிய போசன நிகழ்விலும் 03-06-98 புதன்கிழமை கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்:
தாய், சகோதரர்கள், மனைவி, பிள்ளைகள்.

செ. ஜெயச்சந்திரன்,
7/1, அன்னசத்திர லேன்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (56487)


## St. Patricks College A|L 2000

Applications are welcome from students wishing to follow the A/L Course (in Arts, Commerce, Mathematics & Biology preparation for the examination in the year 2000)

-- Rector

(C/3901)



## பல்கலைக்கழக அனுமதி விண்ணப்பம்

1998/ 99 ஆம் கல்வியாண்டுக்கான பல்கலைக் கழக அனுமதி விண்ணப்பம் விற்பனையாகிறது.

பூபாலசிங்கம் புத்தகசாலை,
இல. 4, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/3903)


## மரண அறிவித்தல்கள்

### அருணாசலம் குருசாமி

காங்கேசன்துறை றங்கனியவளவைப் பிறப்பிடமாகவும், சண்டிலிப்பாய் வடக்கை வதிவிடமாகவும் கொண்ட அருணாசலம் குருசாமி (முன்னாள் முகாமையாளர் யா/ ஐக்கிய வியாபாரச் சங்கக்கிளை) 31-05-98 இல் காலமானார்.

அன்னார் சொர்ணலட்சுமியின் அன்புக் கணவரும், பிரேம்குமார் (கணேசன் ரெக்ஸ்ரைல்ஸ் லிமிற்றெட் கொழும்பு), சுரேஸ்குமார் (லண்டன்) சுகுமார் (ரகு - கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், றஞ்சனாதேவி, மாலினி, சீதாதேவி ஆகியோரின் மாமனாரும், பிருந்தன், மதுரா, கிருஷாந், தினேஷ் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02-06-98) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பகல் 11 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொட்டுப்பனை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:
கு. பிறேம்குமார்
(மகன்)

சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய். (56483)

### கந்தையா சிவசம்பு

(சம்பு மெக்கானிக்)

சாவகச்சேரி, கச்சாய் வீதியில் வசித்தவராகிய கந்தையா சிவசம்பு (சம்பு மெக்கானிக்) 31.05.98 அன்று சிவபதம் அடைந்து விட்டார்.

இவர் கந்தையா சிவக்கொழுந்துவின் புதல்வரும் அமரர் ஆவரங்கால் செல்லத்துரை, நல்லபிள்ளையின் மருமகனும், சகுந்தலாதேவியின் கணவரும், மகேஸ்வரன் (ஜேர்மனி) வத்சலா (சா/ மகளிர் கல்லூரி ஆசிரியை) க. சபேஸ்வரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காந்தரூபி (ஜேர்மனி) இரத்தினசிங்கம் (பொறியியலாளர், கொழும்பு) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், நிகேதனின் அன்புப்பேரனும் இராசையா, சொர்ணம்மா, நகுலாம்பிகை ஆகியோரின் சகோதரரும் கனகம்மா, ஞானசுந்தரம், திரவியம் (கராஜ் உரிமையாளர், சாவகச்சேரி), பரமநாதன் (கனடா) பராசக்தி, கனகாம்பிகை, பாலச்சந்திரன் (ஆவரங்கால்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2-6-98) செவ்வாய்க்கிழமை பி. ப. 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சகுந்தலாதேவி
(மனைவி)

கச்சாய் வீதி,
சாவகச்சேரி. (56495)

## சமய சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூன் 2

நீராவியடி ஸ்ரீ ஜெய வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு நடத்தப்படும் தொடர் சமய நிகழ்ச்சியில் இன்று ''ஆட்டுவித்தவனே ஆட்கொண்டான்'' என்னும் பொருளில் ந. விஜயசுந்தரம் சொற்பொழிவாற்றுவார்.

மாலை 5.30 மணி தொடக்கம் 6.30 மணி வரை இச் சமயச் சொற்பொழிவு இடம்பெறும். (இ-7)

## மாதாந்த உதவிப்பணம்

கொழும்புத்துறை, ஜூன் 2

யாழ். பிரதேச செயலாளர் பிரிவில் மாதாந்த உதவிப் பணம் பெறுவோர் மற்றும் காச நோய், புற்று நோய், தொழு நோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கான ஏப்ரல் மாதக் கொடுப்பனவுகள் தற்போது யாழ். பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவினரால் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இப்பணத்தைப் பெறுவோர் தத்தமது பகுதி அஞ்சல் அலுவலகங்களுக்கு நேரில் சென்று ஏப்ரல் மாதக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளலாம் என யாழ் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (ஐ-30)


### ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.

கடைசி வாரமாக
கார்த்திக், சௌந்தர்யா நடித்த
**பொன்னுமணி**
தினசரி
10-30 — 2-00, 5-00
(புதிய நேரம்)
(சி/3905)



### லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.

புதன் வரை
TITANIC
Part I & II ஒரே தடவையில் காண்பிக்கப்படும்
வியாழன், வெள்ளி
விஜய் - விஜயகாந்த் கௌதமி நடித்த
**செந்தூரபாண்டி**
நேரம்:- 10-00, 2-30
(பழைய நேரம்)
Tele. No. 070 - 212223
(56294)



### நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்.

02-06-98 திங்கள்
அகல வெண் திரையில்
கமல், அர்ஜுன் கௌதமி நடித்த
**குருதிப்புனல்**
( CD வெளியீடு )
காட்சி:- 10-30, 2-30
அடுத்த வெளியீடு
**எங்கவீட்டுப் பிள்ளை**
(56499)



### சிவா திரையில்

கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

அப்பாஸ் - சிம்ரான் நடித்த
**இது தான் காதல்**
தினசரி 10-30 — 2-30
(பழைய நேரம்)
(56501)


## ரூபா 3 ஆயிரம் அபராதம்

23 போத்தல் கசிப்பு வைத்திருந்ததாக குற்றம்சாட்டப்பட்ட ஒருவருக்கு மல்லாகம் நீதிமன்றத்தினால் 3 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டது.

அ. சிறிகாந்தன் என்பவரிடமிருந்தே இவ்வாறு தண்டம் அறவிடப்பட்டது. (இ-5)

## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் சபாரத்தினம்

(Retd. Interpreter Mudaliyar of Supreme Court)

மல்லாகத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் சபாரத்தினம் 1-6-98 இல் அவரது மல்லாகம் 8ஆம் கட்டை இல்லத்தில் சிவபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் முருகேசு சுப்பிரமணியம் தம்பதிகளின் அன்பு மகனும், பறுவதம் சுந்தரேஸ்வரியின் கணவரும், திருமதி உஷாதேவி, பிரேமாதேவி, சௌமியாதேவி (ஆசிரியை, மகாஜனாக் கல்லூரி), சதானந்தன் (C. T. B கோண்டாவில்), Dr. சண்முகானந்தன் (U. S. A.) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. க. நாகராசா (அதிபர், தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி), திரு. சு. இராயேந்திரம் (குவைத்), திரு. கு. விசுவலிங்கம் (சட்டத்தரணி), காலஞ்சென்ற ச. யோகலட்சுமி (முன்னாள் உத்தியோகத்தர், இலங்கை வங்கி) ஆகியோரின் அன்பு மாமனாரும், இ. சுஜீவன், இ. சுயந்தன் ஆகியோரின் அன்புப் பேரனும், செல்லம்மா காலஞ்சென்ற சுப்பிரமணியம், திருமதி சேனாதிராசா ஜெயநாயகி, திருமதி பரமேஸ்வரி சின்னத்துரை, காலஞ்சென்ற சு. பொன்னுத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (2-6-98) இன்று செவ்வாய்க்கிழமை 10 மணிக்கு அவரது மல்லாகம் இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சு. சதானந்தன்
(மகன்)

8 ஆம் கட்டை,
மல்லாகம். (56479)

### மாதன் தம்பையா

(மேசன் தம்பையா)

சோதிவேம்படி லேன், மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாதன் தம்பையா அவர்கள் 01 — 06 — 1998 காலை காலஞ்சென்று விட்டார்.

அன்னார் தங்கச்சி அம்மாவின் அன்புக் கணவரும், பிள்ளைகள் செல்வராணி, நாகேஸ்வரி, உருத்திரன், சந்திரன், அமரர் ஐயாத்துரை (ராசா) அன்னாத்துரை (வவா), அருமைத்துரை (வேவி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், P. தியாகராஜா (கோண்டாவில்), பூபாலசிங்கம் (மானிப்பாய்), புஸ்பராணி (கோண்டாவில்), தெய்வநாயகி (கட்டுடை), தேவமணி (காரைநகர்), பவளம் (மாதகல்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02- 06- 98) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

மானிப்பாய். (56496)

### இரத்தினம் மனோகரன்

(முன்னாள் தேசிக்காய் வியாபாரி)

சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் மனோகரன் 31-05-98 இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு திருமதி இரத்தினம் அவர்களின் அன்பு மகனும், பத்மாவதியின் அன்புக் கணவரும், கவிதாவின் அன்புத்தந்தையாரும், தேவகுமாரின் (குமார் விற்பனை நிலையம், சாவகச்சேரி) அன்பு மாமனாரும், விமலாதேவி, தனலட்சுமி (ஜேர்மனி), இந்திராணி, தனபாலசிங்கம் ஆகியோரின் அன்புச்சகோதரனும், தங்கராசா, வசந்தாதேவி, சுசிலாதேவி (ஜேர்மனி), லீலாதேவி, நிர்மலாதேவி, ரவீந்திரராசா, காலஞ்சென்ற தர்மராசா, பீதாம்பரம் (ஜேர்மனி), சிறிகாந்தா (ஜேர்மனி), Lion சற்குணதேவன், சத்தியதேவி, தனபாலசிங்கம், இராசநாயகம், இரங்கநாதன், பரமேந்திரன், ஜவ்விரி, திருமகள் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுகுமார் (கனடா), சசி (ஜேர்மனி), கீதா, விஜி, விஜயகுமார், சுகிர்தன் (ஜேர்மனி), பகிர்தன் (ஜேர்மனி), பரமேஸ்வரன், டிலக்சன், சந்திரவதி, கௌசிகா, காலஞ்சென்ற ராதிகா மற்றும் ரமன், தர்சன், டிலானி, ஸ்டீபன் ஆகியோரின் அன்புப் பெரியப்பவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 2-6-98 இன்று செவ்வாய்கிழமை மாலை4-மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கண்ணாடிப்பிட்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்;
ம. பத்மாவதி
(மனைவி)
குமார் (மருமகன்)
குமார் விற்பனை நிலையம்

தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி. (56488)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயக்கச்சிப் பகுதி மக்கள் தமது இருப்பிடங்களை சென்று பார்த்தனர்!

## கிராம அலுவலருடன் 150 பேர் பயணம்

தென்மராட்சி, ஜூன் 2
சுமார் எட்டு வருடகால இடைவெளிக்குப் பின்னர் இயக்கச்சிப் பகுதி மக்கள் நேற்று முன் தினம் தமது சொந்த இடங்களைப் பார்வையிட அழைத்துச் செல்லப்பட்டனர்.

இடம்பெயர்ந்து பளைப் பிரதேசத்தில் தங்கியிருந்து இயக்கச்சிக்குச் செல்வதற்கு விண்ணப்பித்தவர்களில் 75 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 150 பேர் சைக்கிள்கள் சகிதம் இயக்கச்சி கிராம அலுவலர் வே.வன்னியசிங்கம் தலைமையில் ஞாயிறு காலை புறப்பட்டனர்.

தர்மக்கேணி முகாம் சோதனைச் சாவடியில் பரிசோதனைகள் முடிந்த பின்னர் இயக்கச்சி சந்திவரை படையினரின் பாதுகாப்புடன் அவர்கள் அழைத்து செல்லப்பட்டனர்.

இயக்கச்சி கொற்றாண்டான் குளம், ஊரணியன் பற்று ஆகிய பகுதிகளுக்குச் செல்ல அனுமதி வழங்கப் பட்டதால் அப்பகுதி மக்கள் தங்கள் வசிப்பிடங்களைச் சென்று பார்வையிட்டனர்.

இயக்கச்சிப்பகுதிக்கு சென்றவர்களை படையினர் வரவேற்றனர்.

அனைத்து மக்களும் தமது சொந்த இடங்களுக்கு விரைவில் திரும்பவேண்டுமென்பதே எமது ஆவல். இயக்கச்சிப் பகுதியில் பலத்த மோதல்கள் இடம் பெற்றதால் இப்பகுதியின் பல் இடங்கள் இன்னமும் பரிசோதிக்காத நிலையில் உள்ளதால் அனைவரையும் அவர்களது சொந்த இடங்களில் உடனடியாக குடியிருத்த முடியவில்லை. வெகு விரைவில் இயக்கச்சியின் அனைத்து இடங்களும் பரிசோதிக்கப்பட்டு அனைவரையும் குடியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் — என்று அங்குள்ள படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது அங்கு குடியமரவுள்ளவர்களுக்கு முகாம் அமைக்கப்படவுள்ளது. தற்காலிகமாக அங்கு தங்க வைத்து தேவையான வசதிகள் செய்துகொடுப்பதுடன் அவர்களின் சொந்தக் குடியிருப்புகள் உள்ள பகுதிகள் பரிசோதிக்கப்பட்ட பின்னர் அவர்கள் தங்கள் வீடுகளில் குடியமர அனுமதிக்கப்படுவர் எனத்தெரிவிக்கப்பட்டது.

காலையில் சென்ற பொது மக்கள் பி.ப.1.30 மணிக்கு அங்கிருந்து திரும்பி பி.ப 3.00 மணிக்கு பளைக்கு வந்து சேர்ந்தனர்.

(ஐ–117)

# கோழித்தீனியை கிளைக் குழு சிபார்சுடன் விநியோகிக்கஅனுமதிக்குக

## அரச அதிபரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 2
கால்நடை வைத்தியரின் சிபார்சின் பேரில் கோழித் தீனியை விநியோகிக்க வேண்டும் என்ற நடை முறையை ரத்துச்செய்து சங்க கிளைக் குழுக்களின் சிபார்சின் பேரில் அதை விநியோகம் செய்ய அனுமதிக்க வேண்டும்.

யாழ். ப. நோ. கூ. சங்கத் தலைவர் சீ. வி. கே. சிவஞானம் மேற்கண்டவாறு யாழ். அரச அதிபரிடம் கோரியுள்ளார்.

இது தொடர்பாக அவர் அரச அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது:-

யாழ். மாவட்டத்தில் கால் நடை வைத்தியர் செயற்படு எல்லைப் பரப்பை எடுத்துக்கொண்டால் அது மிகவும் பரந்து விரிந்ததாகக்காணப்படுகிறது.

கால்நடை வைத்தியரிடம் இருந்து சிபார்சு பெறவேண்டுமானால் அது வாரக்கணக்கில் செல்லக்கூடிய சாத்தியமும் உண்டு.

இந்த நடைமுறை காரணமாக சிறிய, பெரிய அளவில் கோழி வளர்ப்போர் தனியார் துறையினரிடம் இருந்து கூடிய விலைக்கு கோழித் தீனைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அல்லது கோழி வளர்ப்பை நிறுத்த வேண்டிய நிலைக்கு தள்ளப் படுவது தவிர்க்க முடியாததாகி விடும்.

ஆகவே புதிய நடைமுறையைக் கைவிட்டு முன்னர் இருந்த படி சங்க கிளைக் குழுக்கள் மூலம் கோழித்தீன் விநியோகம் மேற்கொள்ள அனுமதிக்கவும்—

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ–3)

# வீடுகள், எல்லைகள், கட்டடங்களின்றி வனப் பிரதேசமாகியுள்ள இயக்கச்சி

## அங்கு சென்று திரும்பியோர் விவரிப்பு

தென்மராட்சி, ஜூன் 2
காணிகள், எல்லைகள், வீடுகள் இருந்ததற்கான அடையாளமே தெரியாதவாறு அடர்ந்த பற்றைக் காட்டுப் பிரதேசமாக இயக்கச்சிப் பகுதி காட்சியளிக்கிறது.

கடந்த ஞாயிறன்று இயக்கச்சியில் தமது சொந்த இருப்பிடங்களைப் பார்வையிடச் சென்று திரும்பியோர் இவ்வாறு தெரிவித்தனர்.

சுமார் 8 ஆண்டுகளின் பின் தங்கள் சொந்த இருப்பிடங்களைப் பார்த்து அதிர்ச்சியடைந்த நிலையில் திரும்பிய அந்த மக்களை 'உதயன்' தென்மராட்சி செய்தியாளர் சந்தித்தார்.

இயக்கச்சிப் பகுதியின் இன்றைய நிலை குறித்து அவர்கள் விபரித்தாவது:-

ஒவ்வொரு காணியிலும் வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டு பயன்தரு மரங்களான தென்னை, பலா, மா ஆகியவை தறித்தெடுக்கப்பட்ட நிலையில் உள்ளன. காணிகளில் பற்றைச் செடிகள் வளர்ந்து எல்லைகள் தெரியாத அளவுக்கு காடாக காட்சி தருகிறது. காணிகளின், வீடுகளின் அவல நிலையைப்பார்த்த பலர் வாய்விட்டு அழுதனர்.

பாதைகளில் முள்ளுப் பற்றைகளாகக் காணப்பட்டதால் பெரும் சிரமத்தின் மத்தியிலேயே காணிகளைப் பார்க்க முடிந்தது.

இயக்கச்சி விட்டல் தோட்டம் தொடக்கம் சந்திவரை சுமார் 500 யார் தூரத்திற்கு கண்டி வீதியின் இருமருங்கிலும் வீடுகளோ, மரங்களோ இல்லாத நிலையில் பரந்தவெளியாகக் காணப்பட்டது.

ஒரே ஒரு வீடு மட்டும் படையினரின் பாவனையில் உள்ளதால் அது உடைக்கப்படாமல் உள்ளது.

இயக்கச்சி அ.த.க. பாடசாலை, முள்ளிப்பற்று கிராம சபை அலுவலகம், இயக்கச்சி சந்தியில் காணப்பட்ட கடைகள், சந்தைக் கட்டடம் ஆகியவை தரைமட்டமாக காணப்பட்டன. இயக்கச்சி சந்தை மலகூடம் மட்டும் முழுமையாக உள்ளது.

இயக்கச்சி சந்தையில் உள்ள தேவாலயத்தின் கட்டடங்கள், கூரைகள் சேதமடைந்துள்ள போதிலும் தேவாலயத்தில் வைக்கப்பட்டிருந்த சொரூபம் எதுவித சேதமுமின்றிக் காணப்பட்டது.

இப்பகுதியில் உள்ள இந்துக் கோயில்களில் தினமும் பூக்கள் வைக்கப்பட்டு வழிபாடு செய்வதற்கான அடையாளங்கள் காணப்பட்டன. சில இந்து ஆலயங்களில் புத்தரின் சிலை வைக்கப்பட்டு வழிபாடு நடத்தப்பட்டுள்ளது,

அண்மையில் அப் பகுதியில் மழை பெய்திருக்க வேண்டும் என்பதற்கு அடையாளமாக குளங்கள் அனைத்தும் நிரம்பியுள்ளன. எங்கு பார்த்தாலும் பச்சைப்பசேலென புற்கள் வளர்ந்துள்ளன.

ஊரணியன்பற்றுப் பகுதியைப் பார்க்கச் சென்றவர்களை அங்குள்ள பாதுகாப்பு அரணுக்கு வெளியே செல்ல படையினர் அனுமதிக்கவில்லை. இருப்பினும் அரணுக்கு வெளியே நின்று பார்த்த போது சுமார் 200 யார் தூரத்தில் கண்ணிவெடிக்கு இலக்கான உழவு இயந்திரத்தின் உதிரிப்பாகங்கள் நாலாபக்கமும் சிதறிய நிலையில் காணப்பட்டன. எப்போது இந்த சம்பவம் இடம்பெற்றது என்பது தெரியவில்லை.

— இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர். (ஐ–117)

## சனசமூக நிலையம் இயங்குகிறது

கொழும்புத்துறை, ஜூன் 2
கொக்குவில் மனோன்மணி சனசமூக நிலையம் கடந்த யுத்தகால அனர்த்தங்களின் பின் புனரமைக்கப்பட்டு புதிய ஆட்சிக்குழு தெரிவு செய்யப்பட்டு இயங்கி வருகிறது. (ஐ–30)

# கொழும்பு செல்லும் புற்றுநோயாளர்; தங்குமிட வசதி அளிக்கத் திட்டம்

## நிதி உதவி வழங்கக் கோரிக்கை

புற்று நோய்ச் சிகிச்சைகளுக்காக குடாநாட்டில் இருந்து கொழும்பு செல்லும் நோயாளிகள் அங்கு தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கு வேண்டிய தங்குமிட வசதிகளை ஏற்படுத்த வடக்கு-கிழக்கு புற்று நோய் உதவி (Cane) என்ற அமைப்பு நடவடிக்கை எடுக்கவுள்ளது.

புற்று நோய்க்கான கதிரியக்கச் சிகிச்சையைப் பெறுவதற்குக் கொழும்பு செல்லும் பயணிகளுக்கு உதவும் முகமாக வடக்கு – கிழக்கு (இலங்கை) புற்று நோய் உதவி அமைப்பு தற்போது நோயாளர்கள் கொழும்பு செல்லும் போது அவர்களுக்கு 2 ஆயிரம் ரூபா பணத்தினை வழங்கி வருகின்றது.

புற்று நோயாளர்களுக்கு உதவும் திட்டத்தை விரிவாக்கும் நோக்கத்துடனேயே கொழும்பில் நோயாளர்கள் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கான வசதிகளை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த 96 ஆம் ஆண்டு மார்ச் மாதம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த அமைப்பு இதுவரை காலமும் ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபா பண உதவியை புற்று நோயாளர்களுக்கு வழங்கியுள்ளது.

இதற்கான நிதியை வடக்கு - கிழக்கு புற்று நோயாளர் சங்கத்துக்கு பிரிட்டனில் அமைந்துள்ள அதன் தலைமையகம் வழங்கி வருகிறது.

எனினும் நோயாளர்களுக்கான உதவிகளை மேலும் மேம்படுத்துவதற்கு இந்த நிதியுதவி போதுமானதாக இல்லாமையால் நலன் விரும்பிகள் பொதுஸ்தாபனங்கள் ஆகிய தரப்புக்களிடம் இருந்து நிதிசேகரிக்க இந்த அமைப்பு திட்டமிட்டுள்ளது.

நிதி உதவி வழங்க முன்வருவோர் யாழ். ஆஸ்பத்திரியில் இயங்கும் அமைப்பின் செயலாளருடன் தொடர்பு கொள்ளலாம் [illegible]. (ஐ-6–15)

## கண்ணீர் அஞ்சலி

திருமதி
பரிமளம் மகேந்திரசிங்கம்

முன்னாளில் எங்கள் பாடசாலையில் பணியாற்றியவரும் தற்பொழுது எங்கள் பாடசாலையில் ஆசிரியராகப் பணிபுரியும்

திரு. வே. மகேந்திரசிங்கம்
அவர்களின் அன்பு மனைவி

திருமதி பரிமளம் மகேந்திரசிங்கம்.

அவர்களின் மறைவுக்காக எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நவீல்ட் பாடசாலை ஐக்கிய சங்கம்,
கைதடி.

(56491)

## 6ஆம் மாத நினைவஞ்சலி



செல்வன்
செல்வராஜா விக்கினேஸ்வரபவானந்தன்
(விக்சி or மோகன்)

மலர்வு 23 — 10 — 1973
உதிர்வு 07 — 12 — 1997
திதி 02 - 06 - 1998

எண் மூன்று ஆண்டுகள்
எம்மோடு வாழ்ந்த
எம் பாசப் பிணைப்பு
எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு
எந்த இறைவனடி சேர்ந்தாயோ?
எங்கள் அன்புத் தெய்வமே!
உங்கள் நினைவுகள் எம்முடன்
என்றென்றும் வாழும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கும்:

அன்பு அப்பா, அம்மா,
சகோதர சகோதரிகள்,
மைத்துனர்கள், மருமக்கள்.

N. சந்திரசேகரன் (மைத்துனர்)
2A ஐயனார் கோயில் றோட்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (56489)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்ட புதிய இனங்களை உடைய கலர் மீன்கள் கண்ணாடியிலான மீன் தொட்டிகள் விற்பனைக்கு உண்டு. 12 மணியிலிருந்து தொடர்பு கொள்ளவும். A. அருளானந்தம், 588/8, நாவலர் வீதி, அரியாலை. (ஸ்ரான்லி கல்லூரிக்கு முன் ஒழுங்கை). [56433[

### தவறிவிட்டது

நடராசா நாகேஸ்வரி ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (495210359V) வங்கிப்புத்தகம் (Bank Book) என்பன சிறுபையுடன் இராசவீதிச்சந்திக்கும், இருபாலைச்சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க் கண்ட முகவரியில் ஒப்படைக்கவும். சின்னத்தம்பி கடை, இருபாலைச்சந்தி.

[56477]

சிவராசா சிவசேகர், இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி என்பவரது விசேட அடையாள அட்டை (0902034482) திருநெல்வேலி பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 'கரன் ரெக்ஸ்' திருநெல்வேலிச் சந்தி என்ற முகவரியில் ஒப்படைக்கவும்.

[56463]

## நூல் வெளியீடு

கொழும்புத்துறை, ஜூன் 2

எழுதுமட்டுவாள் அருள்மிகு ஸ்ரீ வரத விநாயகர் ஆலயத்தின் வரலாற்று நூல் வெளியீட்டு விழா அண்மையில் ஆலய மண்டபத்தில் வே. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

(ஐ-30)

## திருத்தப்படாத வீதி

நீர்வேலி, ஜூன் 2

ஊரெழுவிலிருந்து பொக்கணை ஊடாக சுன்னாகம் செல்லும் சுமார் 2 மைல் நீளமான வீதி நீண்ட காலமாகத் திருத்தப்படாத நிலையில் உள்ளது.

சுன்னாகம் சந்தைக்கு செல்லும் நீர்வேலி, கோப்பாய், கரந்தன் ஊரெழுப் பகுதி விவசாயிகளும், பொது மக்களும் இவ்வீதியை பெரிதும் பயன்படுத்தி வருகின்றனர்.

மாரிகாலம் வந்தால் இப்பாதையில் போக்குவரத்து செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-110)

## திறந்த பல்கலைக்கழக பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 2

இலங்கைதிறந்தபல்கலைக் கழக விஞ்ஞான மானி, கல்வி மானி, கற்கை நெறிக்கான ஆங்கிலம், கணிதத்திற்கான தரப்படுத்தல் - விலக்களிப்பு பரீட்சை எதிர்வரும் 14 ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரியில் காலை 10.00 மணிககு நடைபெறவுள்ளது.

கொழும்பு தலைமையகத்திற்கு நேரடியாக விண்ணப்பித்தவர்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்ட அனுமதி அட்டைகளுடன் பரீட்சை எழுதலாம் என்றும் —

அனுமதி அட்டைகள் கிடைககப் பெறாதவர்கள் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் பிராந்திய இயக்குனர் ச. ஆ. ஞானேந்திரன் தெரிவித்துள்ளார்.

(ஐ-ரீ)

# வடமராட்சி கிழக்குப் பகுதியில் பூசைவழிபாடுஇன்றி பல ஆலயங்கள்

செம்பியன்பற்று ஜூன் 2

வடமராட்சி கிழக்குப்பகுதியில் நீண்டகாலம் பராமரிப்பு இன்றி இருந்து வரும் ஆலயங்களில் பூசை நடத்த அனுமதி வழங்க வேண்டும் என இப்பகுதி இந்து இளைஞர் மன்றத்தினா கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 8 வருடங்களாக பூசை பராமரிப்பு இன்றி உள்ள பிரசித்தி பெற்ற மண்டலாய்ப் பிள்ளையார் ஆலயம், வெட்டு முருகன் ஆலயம், ஐந்தாம்பனைப் பிள்ளையார் ஆலயம் கட்டைக்காடு கப்பல் ஏந்திமாதா ஆலயம்; வெற்றிலைக்கேணி டனித அந்தோனியார் ஆலயம் ஆகியனவும் மற்றும் சில சிறிய ஆலயங்களும் இப்பகுதியில் பராமரிப்பின்றி உள்ளன,

[ஐ-36]

## வடமராட்சி கிழக்கில் தவறணைகள் இயங்கவில்லை

செம்பியன்பற்று, ஜூன் 2

வடமராட்சி கிழக்குப் பகுதியில் பாதுகாப்பு அரணுக்கு வெளியே உள்ள கள்ளுத் தவறணைகள் இயங்காமல் இருப்பதால் இப்பகுதிகளில் உள்ள சீவல் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக மாமுனை, குடத்தனை, அம்பன், நாகர்கோயில் பகுதிகளில் தற்போது கள் உற்பத்தி அதிகரித்துக் காணப்படுகிறது. குடத்தனைப்பகுதிகளில் வீதி ஓரத்தில் கள் வைத்து விற்பனை 'செய்யப்படுவதால் மாணவர்கள், பிரயாணிகள் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

இப்பகுதிகளில் கள்ளுத் தவறணை இயங்கிய காலத்தில் மாமுனைப் பகுதியில் கள் அடைக்கும் தொழிற்சாலை ஒன்றும் இயங்கியது. தற்போது இத்தொழிற்சாலையும் மூடப்பட்டுக் கிடக்கிறது. ஐ-36)

## விளையாட்டு போட்டி

சித்தன்கேணி மாதர் சங்கமும், சனசமூக நிலையமும் இணைந்து சித்தங்கேணி மகாகணபதிப்பிள்ளையார் ஆலய வீதியில் விளையாட்டுப் போட்டி ஒன்றை அண்மையில் நடத்தின.

இந்தப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு வலி.மேற்கு. பிரதேசசபைத்தலைவர் ந. திருலோகநாதன் (லோகன்) உரையாற்றினார்.

'யுத்தத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் உள, உடல் மாற்றங்களுக்கு விளையாட்டுப்போட்டிகள் உதவும்' என்று அவர் தமது உரையில் தெரிவித்தார்,

வலி-மேற்கு பிரதேச செயலர் சந்திரராசாவும் விழாவில் கலந்து கொண்டார், (ஐ-3)

## மாகாணசபைத் தேர்தலில் ஐ.தே. கவுடன் இணைந்து லலித் அணி போட்டி?

கொழும்பு, ஜூன் 2

எதிர்வரும் ஓகஸ்டில் நடைபெறவிருக்கும் மாகாண சபைத் தேர்தல்களில் ஐ. தே. கவுடன் இணைந்து ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (லலித் பிரிவு) போட்டியிடும் என ஐ.தே.க. வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்சமயம் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இக்கட்சிக்கும், அரசாங்கத்துக்கும் இடையில் முரண்பாடுகள் உருவாகி வருகிறது.

இந் நிலையில் ஐ. தே. கவுடன் இணைந்து போட்டியிட அக்கட்சி தொகுதி உடன்பாடு தொடர்பாகப் பேச்சுக்கள் நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பில் மாகாணசபைகளுக்கு முன்னர் தெரிவு செய்யப்பட்ட பலர் இம்முறையும் போட்டியிடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-3)


## நாதன் மற்ஸ் அக்கடமி

உ. அ. அ. பணிமனை வீதி, சண்டிலிப்பாய்.

**O|L DAY CLASS - 1998**

(பகல் நேர வகுப்புக்கள்)

ஆரம்பம்; 1998 — 06 — 05

வெள்ளி காலை 8-00 மணி

ஆசிரியர் குழு:

| | | |
|---|---|---|
| கணிதம் | — | திரு. V. N. பத்மநாதன்<br>திரு. B. குகதாசன் |
| விஞ்ஞானம் | — | திரு. P. தயாநிதி |
| தமிழ் | — | திரு. V. M. லிங்கம் |
| சமூகக்கல்வி | — | திரு. S. ஜெயா |
| ஆங்கிலம் | — | திரு. Y. விஜயபாஸ்கர் |
| வர்த்தகம் | — | திரு. R. புவன்ராஜ் |
| சமயம் | — | பிரபல ஆசிரியர் |

குறிப்பு:- I) கணிதம் சித்தியடையாத A/L மாணவர்களுக்கு பிரத்தியேக கணித வகுப்பு ஆசிரியர்: திரு. V. N பத்மநாதன்

Ii) வாரத்தில் 14 மணிநேரம் கணிதம் நடைபெறும்.

(56478)



## பாராட்டி வாழ்த்துகிறோம்

### விடத்தற்பளை கமலாசினி

க. பொ. த. (சாதாரணதரம்) 1997ஆம் ஆண்டுப் பரீட்சையில் வரலாறு காணாதளவு தொகையினை (82.4%) உயர்தர வகுப்புக்கு தகைமை பெறச் செய்வதற்காக அர்ப்பணிப்புடன் நேரடியாகக் கற்பித்து வளமூட்டிய மதிப்பிற்குரிய ஆசிரியர்கள்.

| | | |
|---|---|---|
| திரு. வி. கணபதிப்பிள்ளை | 100% | தமிழ் |
| திருமதி கு. கதிர்காமநாதன் | 100% | சமயம் |
| திருமதி சி. நவபாலன் | 100% | சமூகக்கல்வியும் வரலாறும் |
| செல்வி வே சிவகாமிப்பிள்ளை | 100% | விவசாய விஞ்ஞானம் |
| திருமதி செ. வேல்நாயகம் | 88.2% | சங்கீதம் |
| திரு. ஐ. மகேந்திரராஜா | 82.4% | கணிதம் |
| திரு. வ. கிருஷ்ணமூர்த்தி | 47.1% | விஞ்ஞானம் |
| திரு. மயில்வாகனம்பிள்ளை | | ஆங்கிலம் |

ஆகியோருக்கும் ஆரம்ப வகுப்புக்களிலும் எமக்கு உரிய முறையில் கற்பித்த ஏனைய ஆசிரியர்களுக்கும், இவ்வாசிரியர்களையும், எம்மையும் தூண்டியதோடு தன்னலம் பாராது நேரடியாகவும் பல பாடங்களில் வழிகாட்டியாகத் திகழ்ந்து எங்களை இந்நிலைக்கு இட்டுச்சென்ற பெருமதிப்பிற்குரிய அதிபர் திரு. கு. கதிர்காமசேகரர் அவர்களுக்கும் நாம் மனமார நன்றி நவில்கின்றோம்.

11ஆம் ஆண்டு மாணவர்கள்
யா/ விடத்தற்பளை
கமலாசினி வித்தியாலயம்,
மிருசுவில்.

(56476)



## நினைவு நிகழ்வுகள்

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்

### அமரர் பேராசிரியர் அ. துரைராசா

அவர்களின் 4 ஆவது நினைவஞ்சலி

[ 11 - 06 - 1998 ] வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் பரமேஸ்வரன் ஆலயத்தில் சங்காபிஷேகம் நடைபெறும். பிற்பகல் 3 மணியளவில் புவியியற்துறை மண்டபத்தில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் அஞ்சலிக்கூட்டம் நடைபெறும். இந் நிகழ்வுகளில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

யாழ். பல்கலைக்கழகம்

தகவல்; ச. க. தனேந்திரன் [56486]



## கண்ணீர் அஞ்சலி

அமரர்

### முருகேசு சுப்பிரமணியம்

எமது பாடசாலையின் ஆசிரியை

திருமதி கௌரி பவளநாதன்

அவர்களின் அன்புத தந்தை முருகேசு சுப்பிரமணியம் அவர்களின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
திருநெல்வேலி இ. த. க. பாடசாலை.

(56482)



சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகமும், சனசமூக நிலையத்தினதும்

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் முடிவுகள்

1 -ம் பரிசுக்குரிய இல. 712
2 -ம் ,, ,, 801
3 -ம் ,, ,, 1252

ஆறுதல் பரிசுக்குரிய இலக்கங்கள்:

3265, 2490, 2051, 3144, 1887

பரிசில்களை 1 மாத தவணைக்குள் கழகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

பரிசுப் பொருள்கள் தந்து உதவியோர்:

1. தாசன் பந்தல் மாவிட்டபுரம்.
2. ராகம்ஸ் பட்டுச்சோலை யாழ்ப்பாணம்.
3. இந்திரன் பல்பொருள் வாணிபம் சித்தன்கேணி.
4. சிற்றி காமென்ஸ் இணுவில்.
5. வளர்பிறை பட்டுச்சோலை
6. மெடிலான்ட் சங்கானை.

சங்கானை.

(56480) - இளைஞர் மு. கழகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்கில் 141 பாடசாலைகள் யுத்தம் காரணமாக இயங்காத நிலை

கொழும்பு, ஜூன் 2

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் யுத்தம் காரணமாக 141 பாடசாலைகள் முற்றாக இயங்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

எட்டு நிர்வாக மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளில் 30 சிங்களப் பாடசாலைகளும் 111 தமிழ்ப் பாடசாலைகளும் செயற்படாமல் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு செயற்படாமல் உள்ள பாடசாலைகளில் 58 பாடசாலைகள் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தவை ஆகும்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் மொத்தம் 1968 பாடசாலைகள் உள்ளன. அவற்றில் தமது சொந்த இடங்களில், சொந்தக் கட்டடங்களில் 1731 பாடசாலைகள் மட்டுமே இயங்கி வருகின்றன. 98 பாடசாலைகள் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் இயங்கி வருகின்றன.

(இ-10-9)

# பயிலுநர் ஆசிரியர் பட்டம் பெற்றால் பட்டதாரிச் சம்பளம் வழங்கப்படும்

## கல்விச்சேவை ஆணைக்குழு நடவடிக்கை

குருநகர், ஜூன் 2

பயிலுநர் ஆசிரியாகளாக சேவையில் உள்ள ஆசிரியர்கள் தமது சேவையில் இருக்கும் போது பட்டம் பெற்றால், அவர்களுக்கும் நிரந்தர ஆசிரியர் சேவையில் இருக்கும் போது பட்டம் பெறும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவது போன்று பட்டதாரிச்சம்பளம் வழங்க கல்விச்சேவை ஆணைக்குழு நடவடிக்கைமேற்கொள்ளும்.

மேற்கண்டவாறு கல்வி உயர்கல்வி அமைச்சின் சிரேஷ்ட துணைச் செயலாளர் எம். டி. பந்துசேன தெரிவித்துள்ளார்.

நிரந்தர சேவையிலுள்ள ஆசிரியர்கள் பட்டம் பெற்றால் பட்டதாரிச் சம்பளம் வழங்கப்படுவது போன்று பயிலுநர் ஆசிரியர்களும் பட்டம்பெற்றால் அவர்களுக்கும் பட்டதாரி ஆசிரியர் சம்பளம் வழங்கப்பட வேண்டும் என தமிமர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் த. மகாசிவம் கல்வி அமைச்சிடம் கோரி இருந்தார்.

இதற்குப் பதில் அளிக்கும் விதத்திலேயே கல்வி, உயர் கல்வி அமைச்சின் சிரேஷ்ட துணைச் செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

(இ-51)

# ஆனைவிழுந்தான் பாலம் மீள் நிர்மாணம்

தென்மராட்சி, ஜூன் 1

ஏப்ரல் மாத முற்பகுதியில் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட பளை ஆனைவிழுந்தான் பாலம் மீள் நிர்மாணம் செய்யப்படவுள்ளது.

இதற்கான ஆரம்ப வேலைகள் வடபகுதி வீதிகள் அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(இ-117)

# இளவாலை சுற்றிவளைப்பு

இளவாலை, மாதகல் பகுதிகள் கடந்த சனிக்கிழமை அதிகாலை முதல் முற்பகல் 11 மணிவரை படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் இடம்பெற்றது.

தேடுதல் முடிந்த பின்னரே அங்கிருந்து யாழ். நகருக்கான பஸ் சேவை இடம்பெற்றது.

(ஐ-ரீ)

# கொடிகாமம் சந்தை நன்னீர் திட்டம் சீரமைப்பு

கொடிகாமம் சந்தைப் பகுதிக்குள் சீரமைக்கப்படாது உள்ள நன்னீர்த் திட்டத்தை மீண்டும் சீரமைக்க அரச சார்பற்ற நிறுவனமாகிய ஜி. ரி. சற். நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இந்த நிறுவனம் நிலாவரையிலுள்ள வற்றாக் கிணற்றிலிருந்து வாதரவத்தையூடாக கப்பூது கிராமத்துக்கான குடிதண்ணீர் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும்—

இச் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தவென சுமார் 10 லட்சம் ரூபா செலவிடப்படவுள்ளதாகவும்— தெரிவிக்கப்படுகிறது.

(இ-31)

# தமிழர்கள் கேகாலையில் கைது

கொழும்பு, ஜூன் 2

கேகாலையிலுள்ள வர்த்தக நிலையங்களில் பணியாற்றும் 21 தமிழர்கள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

திடீர்ச் சோதனைகளின் போது கைது செய்யப்பட்ட இவர்கள் விசாரணைக்காகத் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

(இ-21)

## தலதா மாளிகை ஊழல்:

# அறிக்கை விடவில்லை என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஜூன் 2

கண்டி ஸ்ரீ தலதா மாளிகையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல்கள் சம்பந்தமாக தாம் எந்தப் பத்திரிகைக்கும் அறிக்கை விடவில்லை என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

மல்வத்த, அஸ்கிரிய மகாநாயக்க தேரர்களுக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தலதா மாளிகையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல்கள் தொடர்பாக ஜனாதிபதி பத்திரிகையாளர்களுக்கு அறிக்கை வெளியிட்டிருந்தார் என்ற தகவல்கள் தொடர்பாக மகாநாயக்க தேரர்கள் எழுதியிருந்த கடிதத்துக்கு பதில் கடிதம் எழுதும் பொழுதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

(இ-10-9)

# வயோதிபப் பெண் சூட்டுக்கு பலி

யாழ்ப்பாணம், ஜூன் 2

துப்பாக்கி சூட்டுக் காயங்களுடன் வயோதியப் பெண் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் யாழ். போதனா வைத்தியசாலையில் யாழ்ப்பாணம் பொலீஸாரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சுமார் 55 வயது மதிக்கத்தக்க இந்தப் பெண்ணின் சடலம் அடையாளம் காண்பதற்காகவும் மரண விசாரணைக்காகவும் வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் — கடந்த சனி இரவு 11. 30 மணியளவில் சோதனை நிலையொன்றின் முன்பாக சந்தேகத்துக்குரிய முறையில் ஒருவர் டமாடியதாகவும் —

துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும்—

பின்னர் தேடுதலின்போது பெண் ஒருவரின் சடலம் கைப்பற்றப்பட்டது என்றும்—பலாலி இராணுவத் தலைமையகம் தெரிவித்தது.

(இ-9-15-139)

# குழாய்க் கிணறு வேலை: ஆரம்பிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 2

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் உதவியுடன் பளைப் பிரதேச சபையினால் முகமாலையில் ரூபா 65 ஆயிரம் செலவில் ஆரம்பித்த குழாய்க் கிணறு வேலைகள் இடைநிறுத்தப்பட்டு ஒரு வருடமாகியும் மீண்டும் ஆரம்பிக்காதது குறித்து இப்பகுதி மக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

குழாய்க் கிணறு அமைப்பதற்கான வேலைகள் ஒப்பந்தகாரர் ஒருவருக்கு வழங்கப்பட்ட போதிலும் வேலை ஆரம்பித்த சில நாள்களில் வேலை நிறுத்தப்பட்டதாகவும்—

மீண்டும் ஆரம்பிக்குமாறு இப்பகுதி மக்கள் பிரதேச சபையுடன் பல தடவைகள் தொடர்புகொண்டும் பயன் கிடைக்கவில்லை எனவும் கூறப்படுகிறது.

(இ-117)

# எழுத்தறிவூட்டல் விசேட பயிற்சி

தென்மராட்சி, ஜூன் 2

பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவர்களுக்கான முறைசாராக் கல்வித் திட்டத்தின் கீழ் கெற்டலி அ. த. க. பாடசாலையில் எழுத்தறிவூட்டல் என்னும் விசேட பயிற்சி வைபவ ரீதியாக பாடசாலை அதிபர் சின்னராசாவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி வகுப்புகள் சனி, ஞாயிறு மற்றும் பொது விடுமுறை தினங்களில் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டது.

(இ-117)

# மதகின் அகலம் குறைகிறதே!

"கண்டிவீதியில் மதகுகள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளதாகச் செய்தி வெளியாகி இருந்தது. அதன் பிரகாரம் அரியாலை கண்டி வீதியில் தபாற்கட்டைச் சந்திக்கு அண்மையில் உள்ள மதகும் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இம்மதகு 200வருடங்கள் பழைமைவாய்ந்தது. இந்த மதகு முன்னர் 40 அடி அகலம் கொண்டதாக அமைக்கப்பட்டிருந்ததை யாரும் அறிவர். இது பிரதானமான கண்டி வீதியில் அமைந்துள்ளது. கனரக வாகனங்களின் பாவனைக்குரிய பெருந்தெரு.

அண்மைக்கால போர் நடவடிக்கையால் பாதிப்புற்றுக் கிடந்த மதகை — இப்பொழுது சுமார் 25 அடியாகக் குறுக்கி அமைக்கப்பட்டு வருகிறது. இந்த மதகுக்கு அண்மையில் செம்மணி ஒழுங்கை வந்து சந்திக்கிறது. இந்த ஒழுங்கை பலபொதுமக்களால் பயன் படுத்தப்பட்டு வருகிறது. அப்படியான ஓர் இடத்தில் முன்னர் இருந்ததை விட இப்பொழுது சுமார் 15 அடி வரை அகலத்தைக் குறைத்து புனரமைக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அமைக்கப்பட்டிருப்பது விதி விபத்துக்கு ஏதுவாகும். தெருவின் வடபுறமாக பெரியதொரு இடைவெளி காணப்படுகிறது. இது ஒரு பயங்கரமான வெளியாக உள்ளது.

இதனை வீதி அபிவிருத்தி அதிகாரசபை மறுபரிசிலனை செய்து, இந்த மதகின் அகலத்தை முன்னர் இருந்த அகலத்துக்குக் கட்டி, மக்களின் பாதுகாப்புக்கும் போக்குவரத்துக்கும் துணை புரிவார்கள் என்று நம்புகிறோம்.

இந்த மதகை வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள் ஒருமுறை பார்வையிட்டால் அதன் நிலைமையை நன்குணர்வார்கள்.

தம்பிஐயா யோகராசா

அரியாலை.

# கட்டடத்தை மத்தியில் அமைக்க வேண்டும்

வலிகாமம் வடக்கு பிரதேச செயலகக் கட்டடம் அமைக்க 50 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக அறிந்தோம். மேற்படி கட்டடம் அமைக்க இலவசமாகக் காணி அன்பளிப்புச் செய்யுமாறும் விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. எவரும் இலவசமாகக் காணி வழங்க முன்வரமாட்டார்கள். விலைக்கே காணி வழங்க முன்வருவார்கள். பல அரசாங்கக் கட்டடங்கள் அமைக்கப்பட்ட பொழுது விலைக்கேகாணிவாங்கிக் கட்டப்படுவது உண்டு. அதேபோல் ஒதுக்கப்பட்ட பணத்தில் காணி கொள்வனவு செய்து கட்டடம் அமைப்பதற்கே முயற்சி செய்ய வேண்டும்.

மேலும் வலிகாமம் வடக்கு, பிரதேச செயலகம் மயிலிட்டி கிராம சபைப் பிரிவு, தெல்லிப்பழை கிராம சபைப் பிரிவு, காங்கேசன்துறை பட்டின சபைப் பிரிவு, மல்லாகம் கிராம சபைப் பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கிய பகுதியாகும். இவற்றுள் 45 கிராம சேவையாளர் பிரிவுகள் அடங்கியுள்ளன. தற்பொழுது 15 கிராம சேவையாளர் பிரிவுகளில் மாத்திரமே மக்கள் மீளக் குடியேறியுள்ளார்கள். மிகுதி 30 பிரிவுகளிலும் மக்கள் மீளக் குடியேறவில்லை.

முன்பு இச் செயலகம் ஏறக்குறைய மத்திய பகுதியாகிய தெல்லிப்பழையில் இயங்கி வந்துள்ளது. தற்பொழுது இச் செயலகத்தை மல்லாகம் பகுதிக்கு அண்மையில் அமைக்க முயற்சி செய்யப்படுவதாக அறிகின்றோம். இது மிகவும் அநீதியாகும். இப் பகுதி செயலகப் பிரதேசத்தின் ஓர் ஒதுக்குப்புறப் பகுதியாகும். இப் பகுதியில் செயலகம் அமைக்கப்பட்டால் வசாவிளான், குட்டியப்புலம், பலாலி, சேந்தாங்குளம், மயிலிட்டி, காங்கேசன்துறை, இளவாலை, தையிட்டி போன்ற பகுதி மக்கள் தங்கள் கருமங்களை ஆற்றுவதற்கு மிகவும் சஷ்டப்பட நேரிடும்.

தற்பொழுது படிப்படியாக மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டு வருகிறார்கள். தெல்லிப்பழைச் சந்தி வரை மீளக்குடியமர அனுமதி வழங்கப்படும் எனத் தோன்றுகிறது. ஆகவே செயலகத்தை அவசரப்படாது, பொறுத்திருந்து அமைக்க முயற்சிப்பதே சிறந்ததாகும். வருங்காலத்தையும் மனதிற் கொண்டு யாவருக்கும் வசதியான மத்தியான ஓர் இடத்தில் பிரதேச செயலகக் கட்டடத்தை அமைப்பதே சிறந்ததாகும் இப்போது முடிவு செய்யப்பட்ட இடத்தில் பிரதேச செயலகம் அமைக்கப்படுமாயின் ஏனைய பகுதி மக்களுக்கு செய்யும் பெரும் துரோகமாகும். ஆகவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ் விடயத்தில் கவனம் செலுத்தி ஆவன செய்வார்களென எதிர்பார்க்கின்றோம்.

ஒதுக்கப்பட்ட பணம் திரும்பிச் சென்றுவிடும் என்ற காரணத்திற்காக வசதியற்ற எல்லைப் புறத்தில் கட்டடத்தை அமைக்க முயற்சிப்பது பொருத்தமன்று. இதுவரை காலமும் மேற்படி செயலகம் சொந்தக் கட்டடத்தில் இயங்கவில்லை என்பதும் யாவரும் அறிந்த உண்மை. ஆகவே இவ்வளவு காலமும் பொறுத்தது போல் மேலும் பொறுத்திருந்து மத்தியான இடத்தில் அமைக்க முயற்சியுங்கள்.

வசாவிளான். க. தணிகாசலம்

ஜவுளி உலகின் முன்னோடிகள்!
மங்கள வைபவங்களுக்கேற்ற பட்டுப்புடைவைகள் மற்றும் இதர ஜவுளி தினுசுகளுக்கு நாடவேண்டிய இடம்
ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ. 13, 14, பெரியகடை, யாழ்ப்பாணம். (சி3867)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மாகாணசபைத் தேர்தல்களுக்கு முன்

# அனுமதிப்பத்திரமின்றி வைத்திருக்கும் துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்படும்

கொழும்பு, ஜூன் 2

அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளாமல் தனிநபர்கள் வைத்திருக்கும் சுமார் 17 ஆயிரம் துப்பாக்கிகளை எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலுக்கு முன்பாக கைப்பற்றுவதற்கு பொலீஸ் திணைக்களம் விசேட சுற்றிவளைப்புக்களை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல்களில் குழப்பங்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காகவே இந்தநடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இது குறித்து பொலீஸ்மா அதிபர் சகல மாகாணப்பிரதிப் பொலீஸ்மா அதிபர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாகத்தெரியவருகிறது.

அனுமதிப் பத்திரம் இல்லாத துப்பாக்கிகளை கைப்பற்ற இதற்கு முன்பும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோதும், எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு ஆயிரக்கணக்கான துப்பாக்கிகள் தனியார் கையில்இருப்பதால்நாடெங்கும் குற்றச் செயல்கள் அதிகரித்து வருவதாகவும் எனவே இத்துப்பாக்கிகளைக் கைப்பற்றுவதன் மூலம் தேர்தல் வன்முறைகளைத் தவிர்ப்பதற்கும், நாட்டில் பரவி வரும் வன்முறைகளைக் கட்டுப்படுத்தவும் முடியுமென பொலீஸ் திணைக்களம்நம்புவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10-7)

## கசிப்பு உற்பத்தி செய்த 7 பேர் ரெலோவிடம் சிக்கினர்

யாழ்ப்பாணம், ஜூன் 2

வடமராட்சிப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட ஏழுபேர் தம்மால் கண்டுபிடிக்கப்பட்டுபொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக ரெலோ அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

நெல்லியடியில் வதிரி, ராஜகிராமம் ஆகிய பகுதிகளில் கசிப்பு உற்பத்தி அதிகரித்து வருவதாகத் தமக்கு அதிகளவில் புகார்கள் வந்ததாகவும், இதனையடுத்து நேற்று முன்தினம் தாம் அப்பகுதிகளைச் சோதனையிட்டபோது சட்ட விரோதமானமுறையில், கசிப்புவைத்திருந்த, உற்பத்தி செய்த 7 பேர் தம்மிடம் சிக்கியதாகவும்—

அவர்களிடம் இருந்த உபகரணங்கள் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் ரெலோ அமைப்பினர் தெரிவித்தனர்.

தாம் பிடித்த ஏழு பேரையும் பொலீஸில் ஒப்படைத்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

அதே சமயம் கசிப்பு உற்பத்தி, ஆபாசப்படங்கள் போன்றவற்றை காண்பித்தல் ஆகிய செயற்பாடுகளில் ஈடுபடுவோர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள். வீதிகளில் செல்லும இளம் பெண்களிடம் இளைஞர்கள் சிலர் தவறான முறையில் நடக்க முற்படுவதாகவும் எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. இவ்வாறான செயல்களில் ஈடுபடுவோருக்கு எதிராகவும் தம்மால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும், என்றும் ரெலோ எச்சரித்துள்ளது.

## மீன் விலை வீழ்ச்சி

தென்மராட்சி, ஜூன் 2

பருவப் பெயர்ச்சிக் காற்று ஆரம்பித்துள்ளதால் தற்போது பெருமளவு மீன் பிடிபடுகிறது.

இவற்றைச்சந்தைப்படுத்துவதில் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குவதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர். (இ-171)


தரமான புளொக் தயாரிப்பதற்கு
நாடவேண்டிய இடம்



அருண்
புளொக் தயாரிப்பாளர்
அத்துடன்
குறைந்த கட்டணத்தில்
தரமான முறையில்
O போட்டோ பிரதிகள்
O அடையாள அட்டை கவரிடுதல் (LAMINATION)
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



## வாழ்த்துகின்றோம்

யாழ். நகரில் உதயமாகி, கணித பாடத்தின் மேன்மையை எமக்குணர்த்தி இலகுவான கற்பித்தல் முறை மூலம் சிறந்த பெறுபேறடையச் செய்த

எங்கள் கணித ஆசிரியர்
திரு. T. அற்புதராஜா
அவர்களை வாழ்த்துகின்றோம்.

O/L DAY CLASS மாணவர்கள்.
விக்னா கல்வி நிறுவனம்.

[56466]



## 31-ம் நாள் நினைவஞ்சலி

டாக்டர்
**ஆறுமுகம் ஸ்ரீபத்மநாதன்**
(பதிவு பெற்ற வைத்திய அதிகாரி)

தோற்றம் 09 - 09 - 1942
மறைவு 03 - 05 - 1998

நண்பர்களின் மத்தியில் அன்பனாய்
ஏழை நோயாளர் மத்தியில் இரட்சகனாய்
எங்கள் சங்கத்தின் தூணாய்
குடும்பத்தின் ஒளி விளக்காய்
வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்த "ஸ்ரீ"
விண்ணுலகம் சென்று இன்று 31ஆம் நாள்

எமது அஞ்சலிகளை காணிக்கையாக்குகின்றோம். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு அனுதாபத்தினை தெரிவிப்பதுடன அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உதவி/ பதிவு பெற்ற வைத்திய
அதிகாரிகள் சங்கம்
T. V, 361,
யாழ்ப்பாணக் கிளை.

(56440)


### சீவல் தொழிலாளர்கள்

## வடிசாலைக்கு கள் வழங்க அறிவுறுத்து

நெல்லியடி, ஜூன் 2

திக்கம் வடிசாலை மீண்டும் செயற்படத் தொடங்கியிருப்பதனால் வடமராட்சிப் பகுதியிலுள்ள சீவல் தொழிலாளிகள் தாம் உற்பத்தி செய்யும் கள்ளினை தவறணைகளுக்கு வழங்க வேண்டுமென்றும் —

அவ்விதம் வழங்காது சட்ட விரோதமான முறையில் வீடுகளில் வைத்திருந்து விற்பனை செய்வோர் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் —

பருத்தித்துறை மதுவரி பொறுப்பதிகாரி என். சோதிநாதனும், பருத்தித்துறை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் வ.இராசலிங்கமும் அறிவுறுத்தல்களை விடுத்துள்ளனர், (ஐ-109)

# உடுத்துறைப் பகுதிவரை மீளக்குடியமர அனுமதி

செம்பியன்பற்று ஜூன் 2

வடமராட்சி கிழக்குப்பகுதியில் உள்ள இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசமான உடுத்துறை சுமை தாங்கி வீதிப்பகுதி வரை மக்கள் மீளக்குடியமர படையினர் அனுமதி வழங்கி உள்ளனர்.

இதனை அடுத்து அப்பகுதி மக்கள் மீளக்குடியமரும் நோக்கில் தமது வீடுகளைச் சென்று பார்வையிட்டு வருவதுடன் துப்புரவும் செய்து வருகின்றனர். சிலரின் வீடுகள் சீற், ஓடு என்பன கழற்றப்பட்ட நிலையில் காணப்பட்டதாகவும், சிலரது வீட்டு அத்திவாரக் கற்கள் இடித்து எடுக்கப்பட்டுள்ளதாகவும் நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்,

இதற்கு முன்னர் வத்திராயன் பகுதி வரையுமே மக்கள் மீளக்குடியேற அனுமதிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-36)

### அராலிப் பகுதியில்

## பம்பாய் வெங்காயச் செய்கையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கடன்

வட்டுக்கோட்டை, ஜூன் 2

அண்மையில் பெய்த பெருமழையால் அராலிப்பகுதியில் பயிரிடப்பட்டிருந்த 30 ஏக்கர் பரப்பிலான பம்பாய் வெங்காயமும் பயிர்ச் செய்கைக்காக நாற்றிடப்பட்டிருந்த பெருமளவிலான பம்பாய் வெங்காய நாற்றுகளும் அழிந்துவிட்டன. இதனால் பெருமளவில் நஷ்டம் ஏற்பட்ட விவசாயிகள் தற்போது தரை ஈரம் காய்ந்து வருவதால் மீண்டும் பயிர்ச் செய்கையை ஆரம்பித்து வருகின்றனர். இவர்களுக்கு தேவையான விதைகள் தொல்புரம் கமநல சேவை நிலையத்தாலும் தனியார் வியாபாரிகளாலும் கொழும்பில் இருந்து கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இவ் விவசாயிகள் தொழிலைத் தொடர்ந்து செய்வதற்கு வசதியாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரக நிதியுதவி மூலம் ஒவ்வொரு விவசாயிக்கும் தலா பத்தாயிரம் ரூபா கடன் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் —

கடனைப்பெறும் விவசாயி விவசாய உற்பத்தியை விற்பனை செய்த பின்பு ஆறுவீத வட்டியுடன் சேர்த்து விவசாய சம்மேளனத்திடம் திருப்பிச் செலுத்துதல் வேண்டும். செலுத்தப்படும் பணத்தில் வட்டிப்பணம் குறித்த அமைப்பின் நிர்வாக செலவுகளுக்காகப் பயன்படுத்தப்படும். பண முதல் அடுத்த பருவ பயிர்ச் செய்கைக்கு வேறு தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு கடனாக வழங்கி ஊக்குவிக்கப்படும். இவ்வாறு சுழற்சிமுறையில் இப்பணம் இப்பகுதி விவசாய அபிவிருத்திக்கு மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்படும் என வலி-மேற்கு பிரதேச செயலகம் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ-12)

## வடமராட்சி கிழக்கிற்கும் சிமெந்து விநியோகம்

செம்பியன்பற்று ஜூன் 2

வடமராட்சி கிழக்குப்பகுதி மக்களின் நலன் கருதி படையினரின் அனுமதியுடன் கிராம சேவகர்கள் ஊடாக சிமெந்து விநியோகம் இடம் பெற உள்ளது.

இப்பகுதிக்கு தனியார் சிமெந்து எடுத்துச் செல்வது படையினரால் தடை செய்யப்பட்டுள்ளது.

இதனால் கட்டட வேலைகளுக்கு சிமெந்து பெற முடியாத நிலை உள்ளது. (ஐ-36)

# தமிழுடன் வடமொழிப் புலமையும் மிக்கவர் அமரர் இராஜநாயகம்

### அஞ்சலிக் கூட்டத்தில் உரை

நல்லூர், ஜூன் 2

அமரர் இராஜநாயகத்தின் இலக்கியப் படைப்புக்கள் அழுத்தம் மிக்கதாகவும் ஆழமான பார்வை உடையதாகவும் அமைய தமிழுடன் வடமொழி அறிவும் அவருக்கு இருநததே காரணம்.

மறைந்த எழுத்தாளர் சு. இராஜநாயகத்தின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய பண்டிதர் க. சொக்கலிங்கம் இவ்வாறு கூறினார்.

யாழ். இலக்கிய வட்டத்தின் சார்பில் கல்வயல் வே. குமாரசாமி தலைமையில் நல்லை ஆதீன மண்டபத்தில் அஞ்சலிக்கூட்டம் நடைபெற்றது.

திரு. சொக்கலிங்கம் மேலும் பேசும்போது கூறியதாவது —

எல்லாவற்றிலும் நிதானமாக சொற்களைக் [illegible] நோக்கும் பண்புதான் இராஜநாயகம் யார் என்பதை நமக்குப் புலப்படுத்துகிறது. கனக. செந்திநாதனதும் இவரதும் பாரம்பரியம் வேறாக இருந்தாலும் இருவரும் ஒருவரை ஒருவர் மதித்தனர் — என்றார்.

கல்வயல் குமாரசாமி தமது தலைமையுரையில கூறியதாவது —

இளந் தலைமுறைக்கு இராஜநாயகத்தின் எழுத்துக்கள் ஒரு புதிய பார்வையையும், உத்வேகத்தையும் தரவல்லது. அவர் ஏனையவர்களின் திறமைகளையும், ஆற்றல்களையும் நன்கு மதித்த ஒரு படைப்பாளி. வாழ்ந்து கொண்டு இருக்கும்போதே எழுத்தாளர்களையும், கவிஞர்களையும் மதிக்கவும், பாராட்டவும் நாம் முன்வர வேண்டும்- என்று சொன்னார்.

எழுத்தாளர் கலாநிதி க. குணராசா பேசும்போது கூறியதாவது:-

இடப் பெயர்வினால் நாம் இழந்த மிகப்பெரிய சொத்து திரு. இராஜநாயகம். தனக்கென ஒரு கோட்பாடு அவரிடம் இருந்தபோதும் எமது சமகாலப் பிரச்சினைகளைப் புரிந்து கொண்டு அதற்கமைய வாழ்ந்தவர் அவர்.

ஒரு சிறந்த எழுத்தாளராக இருந்தபோதும் இளம் எழுத்தாளர்களின் எழுத்துக்களைப் படித்துப் பாராட்டி அவர்கள் இத் துறையில் மேலும் வளரவேண்டும் என்று உற்சாகப்படுத்தும் பெருந்தன்மை அவரிடம் உண்டு. தனது கதைகளை வெளியிடுவதிலும் பார்க்க, சம்பந்தன் போன்றவர்களின் கதைகளை வெளியிட வேண்டும்என்பதில் ஆர்வங் காட்டினார். அவரது படைப்புக்களை இளந்தலை முறைக்குத் தரும் வகையில் அவற்றை வெளியிடுவதே நாம் செய்யும் மிகப்பெரிய அஞ்சலியாகும்- என்றார்.

எழுத்தாளர்கள் செம்பியன் செல்வன், வரதர், புத்தொளி ஆகியோரும் உரையாற்றினர். (ஐ-103)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உதயன்

## கண் திறக்குமா?

★ சிறுபான்மை இன மக்கள் தமது அடிப்படை உரிமைகளையும், மனித உரிமைகளையும் தடையின்றி அனுபவிப்பதனை இலங்கை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும்.

★ நாட்டில் அமைதியை உண்டாக்குவதன் மூலமே மனித உரிமைகள் தொடர்பான சூழ்நிலையை மேம்படுத்த முடியும்.

★ மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நட்ட ஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

★ மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் பொலீஸார் மற்றும் படையினர் சேவையில் இருந்து நீக்கப்பட வேண்டும்.

இலங்கையில் மனித உரிமைகள் எந்தளவுக்குப் பேணப்படுகின்றன என்பதனை நேரில் கண்டறிந்த ஐ. நா. சபையின் விசேட அறிக்கையாளர் பாக்ரேவாலி நித்தியாயயே, சபையின் மனித உரிமைக்குழுவுக்குச்சமர்ப்பித்துள்ள அறிக்கையில் மேற்கண்ட விடயங்களைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறுபான்மை இன மக்களுக்கும் மனித உரிமைகள் உண்டு; அவற்றை மீறாது பேணும் பொறுப்பு அரசுக்கு — அதன் அதிகாரிகளுக்கு — முழு அளவில் உண்டு என்பதனைச் சம்பந்தப்பட்ட தரப்பு உணரவில்லை; உணர்ந்திருந்தால் செயற்பாடுகள் அதற்கேற்றவாறு அமைந்திருக்கும்.

பெரும்பான்மை இனத்தின் உடைமையாக மட்டுமே விளங்கும் அரசு போடும் ''பிச்சையை'' — சலுகைகளை — அற்ப சொற்ப உரிமைகளை — மட்டுமே சிறுபான்மை இன மக்கள் அனுபவிக்க அருகதை உள்ளவர்கள் என்ற தோரணையிலேயே அரசும் அதன் அதிகாரிகளும் செயற்படுகிறார்கள்.

சிறுபான்மை இனமக்களின் மனித உரிமைகளை, அடிப்படை உரிமைகளை சற்றும் கணக்கில் எடுக்காது மீறுபவர்கள் அதிகாரிகளே.

ஆனால் அரசு அதனை மறைத்துவிடவே முயல்வது உண்டு. அவர்களை உரிய முறையில் தண்டிக்க நடவடிக்கை எடுக்கப்படுவது மிக மிகக் குறைவு. அதே போன்று மனித உரிமை மீறலால் பாதிக்கப்படுவோருக்கு நஷ்டஈடு வழங்குவதும் குறைவு.

இலங்கையில் மனித உரிமைகள் பேணப்படுவதில் மேம்பாடான நிலை எட்டப்பட்டுள்ளது என்று வக்காலத்து வாங்கும் அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு ஐ. நா. அதிகாரியின் அறிக்கை நல்ல அடி!

மனித உரிமைகள் விடயத்தில் யதார்த்த நிலையைச் சொல்லும் அந்த அறிக்கை, இலங்கை அரசின் கண்களைத் திறக்க வேண்டும். போரை நிறுத்தி நாட்டில் அமைதியைஉண்டாக்குவதன் மூலமே மனித உரிமைகள் தொடர்பான சூழ்நிலையை மேம்படுத்த முடியும் என்ற அறிவுறுத்தலை ஏற்று போரை நிறுத்தவேண்டும்; சமாதான வழியில் அரசியல் தீர்வை விரைந்து காண வேண்டும். அவற்றைச் செய்யாது, பிரசாரத்தின் மூலமும், வெளிநாடுகளிடம் ஆதரவும் செல்வாக்கும் திரட்டுவதன் மூலமும் மனித உரிமைகளைப் பேணமுடியாது.

# நீங்கள் வளர்க்கும் பிராணிகள்

# பலநோய்களைத் தந்துவிடும், கவனம்!

விலங்குகளை வளர்க்கும் நாம், விலங்குகளில் இருந்து வளர்ப்புப் பிராணிகளில் இருந்து, பல தரப்பட்ட பயன்களைப் பெறும் வேளையில் அவற்றின் மூலம் பல்வேறு நோய்களும் ஏற்பட இடம் உண்டு என்பதைச் சிந்திப்பதில்லை.

நாய் நாம் வீட்டில் வளர்க்கும் பிராணி; இது ஒரு செல்லப்பிராணியாக எமது மடியில் தவழ்வதும் உண்டு. அதனை ஆசையோடு தொட்டணைத்து விளையாடுகின்றோம். ஏனைய மிருகங்களைவிட அதனால் எமக்குப் பெரும் தீங்குகள் உண்டாகும் என்பதை நாம் எண்ணுவதில்லை பிராணிகளால் மனிதருக்குத் தொற்றும் ''சூநொற்றிக் டிசீசஸ்'' (ZOONOTIC DISEASES) மருத்துவ உலகிற்கு சவாலாக விளங்கும் நோய்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இறைச்சியை நன்கு வேகவைத்து உண்ணுதல், பாலை நன்றாக கொதிக்க வைத்துப் பருகுதல், தனிநபர் சுகாதாரம் பேணுதல், தடுப்பூசி போடுதல் போன்ற நடவடிக்கைகள் இது போன்ற நோய்த் தாக்கங்களை தடுக்கஉதவும்.

மற்ற மிருகங்கள் போலன்றி நாயினால தீங்குகளும் நோய்களும் அதிகம் ஏற்படச் சந்தர்ப்பங்கள் உண்டு என்பதால் நாய்களை வளர்ப்பவர்கள் அவற்றை உரிய முறையில் வளர்த்தெடுக்கத் தெரிந்திருத்தல் அவசியம். நாய்களை மலம் கழிப்பதற்காக வீதிகளுக்குத் துரத்திவிடும் செயல்கள் தவிர்க்கப்பட வேண்டும்.

## வீதிகளில் மலம் கழித்தல்

நாய்களால் வீதிகளில் கழிக்கப்படும் மலம் உலர்ந்து தூளாகி மண்ணின் மேற்பரப்பில் கிடக்கும் போது வேகமாக வீசும் காற்றினால் வீதிகளில் பயணம் செய்யும் மக்கள் மீதும் திறந்த கிணறுகளுள்ளும் தூவப்படும். இதனால் பல பொல்லாத வியாதிகள் தொற்றும் சாத்தியம் உண்டு.

பூனைக்கு இயல்பாகவே ஒரு நல்ல குணமுண்டு. அது தனது மலத்தைக் குழி தோண்டிப் புதைப்பதால் பூனைகளின் கழிவு காற்றினால் விசிறப்படும் சாத்தியம் குறைவு. ஆனால் மண்ணில் கலந்திருக்கும் நாயின் மலத்தையும் வெட்டிப் புதைத்து விடுதல் மனிதர்களுக்குப் பாதுகாப்பானது.

## விலங்கு விசர்

விலங்கு விசர் (Rabies) எனப்படும் நோய்க்காரணிகளான வைரசுகள் இளஞ்சூட்டுக் குருதியுடைய எல்லா விலங்குகளையும்தாக்கும் எனினும், நாய், பூனை, ஓநாய் போன்றவற்றிலேயே இந்நோய் அதிகம் காணப்படுகிறது. இந்நோய்க்குரிய வைரசுகள் நாயின் உமிழ் நீர் மூலம் வெளியேறுகிறது. தொற்று ஏற்பட்ட மிருகம் மனிதரைக் கடித்தல் அல்லது நக்குதல் மூலமாக இந்நோய் பெருமளவில் ஏற்படலாம். இதைக் குணப்படுத்த முடியாது. ஆயினும் நாய் கடித்தவுடன் தடுப்பூசி ஏற்றினால் பயன் கிட்டும்.

இந்த நோய் ஏற்படும் பட்சத்தில் நாய் கடித்த இடத்தில் நோவு அதிகரித்துக் கொண்டு செல்லும். காய்ச்சல் ஏற்படும். வெளிச்சம், காற்று, சத்தம் ஆகியவற்றை நோயாளி தாங்க மாட்டார். மிகவும் அவதிப்படுவார். தண்ணீரை வெறுப்பார். இருமும் போது தொண்டை கழுத்துத் தசைகள் இழுபட்டுக் கண்மணி விரியும். உமிழ்நீர், கண்ணீர் என்பன கூடுதலாகச் சுரக்கும். இந்த நோயாளி இறப்பது திண்ணம். இவரால் கடியுண்பவருக்கும்இந்த நோய் காலனாகிவிடும்.

சிற்றுண்ணியால் நாய்களுக்கு நாய்ச்சிரங்கு (Sarcoptes Scabei) ஏற்படும். இச் சிற்றுண்ணி மனிதனின் தோலில் சொறி ஏற்படுத்தும் வல்லமை உள்ளது. நாய்கள் குட்டை எனக் கூறப்படும் (Dermodiscosis) நோயினால் பாதிக்கப்படும். இதனால் பாதிக்கப்படும் நாய்கள் சொறிந்த நிலையில் திரிவதால் மயிர்கள் கொட்டப்படும். இப்படியான நாய்களினால் மனிதர்களது தோலிலும் சொறி ஏற்படும்.

றொக்ஸோ சாறியசிஸ் (Toxocariasis) எனும் நோயை ஏற்படுத்தும் றொக்ஸோகாரு (Toxocara) என்னும் ஒட்டுண்ணியும் றொக்ஸோ பிளாஸ்மோசிஸ் (Toxoplasmosis) என்னும் நோயை ஏற்படுத்தும் ஒட்டுண்ணியான றொக்ஸோ பிளாஸ்மா கொண்டி (Toxoplasma Gondii) ஒட்டுண்ணியும் இம்மிருகங்களின் உணவுக்கால்வாயில் வாழும். இவற்றின் முட்டைகள் மலத்துடன் வெளியேறும்.

# நாய் ஒட்டுண்ணியால் பிள்ளைகள் குருடு, செவிடாகப் பிறக்கலாம்

## குருடு செவிடு ஆக்கும்

நாய், பூனை மலத்துணிக்கைகளை கலந்த மண்ணில் கிடக்கும் பழங்கள், நன்கு கழுவாத காய்கறிகளை உண்பதால் மேற்கூறிய ஒட்டுண்ணிகள் நமது உணவுக்கால்வாயைச் சென்றடைந்து மேற்குறிப்பிட்ட நோயைத் தொற்றுவிக்கும். மேலும் நாயின் சிறுகுடலில் வாழும் நாடாப்புழு ''ஹைடாற்றிட்'' (Hydatid DIsease) என்ற நோயை ஏற்படுத்தும். இதனால் மனிதனின் முக்கிய உறுப்புக்களான ஈரல், சுவா

(8 ஆம் பக்கம் பார்க்க)

*கொக்குவில் இந்துக் கல்லூரியில் அண்மையில் தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம் அவர்களின் நினைவுப் பேருரை நடைபெற்றது.*

*யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஒட்டுண்ணியியல் விரிவுரையாளர் செல்வி ஆனந்த ரூபி ஏரம்பமூர்த்தி வளர்ப்பு மிருகங்களினால் உண்டாகும் நோய்கள் குறித்து ஆற்றிய நினைவுப் பேருரை இங்கு கட்டுரை வடிவில் தரப்படுகிறது.*

தொகுப்பு: நெடுந்தீவு லக்ஷ்மன்

### சந்தை வாய்ப்புக் கிடைக்காததால்

# மட்டுப்படுத்திய அளவில் விவசாயம்; அதனால் பல தொழில்கள் மந்தம்

போதிய சந்தைப்படுத்தலின்றி யாழ்ப்பாணமாவட்ட விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

கடந்த பத்தாண்டுகளுக்கு முன்னர் யாழ். மாவட்ட விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களான மிளகாய், வெங்காயம் என்பன பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினாலும், விளைபொருட் கூட்டுறவுச் சங்கங்களினாலும் சேகரிக்கப்பட்டு கொழும்புச்சந்தைக்கு அனுப்பப்பட்டன. வெங்காயம் கூடைகளில் போட்டு சாக்குகளில் கட்டி ரயில்மூலம் வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசத்தின் முகாமையின் கீழ் கொழும்புக்கு அனுப்பப்பட்டது. செத்தல் மிளகாயும் இவ்வண்ணமே பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினால் கொள்வனவு செய்யப்பட்டு சமாசங்களின் முகாமையின் கீழ் ரயில் மூலம் 'ஏற்றுமதி' செய்யப்பட்டது.

இதுமட்டுமா? வாழைக்குலைகூட தோட்டம்தோட்டமாக சேகரிக்கப்பட்டு தரம் போடப்பட்டு ரயில் மூலம் கொழும்புக்கும், லொறிகள் மூலம் மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களுக்கும் அனுப்பப்பட்டு வந்தது.

இன்னும் தனியார் வாகனங்கள் மூலமும் வெங்காயம், பூசணிக்காய், உருளைக்கிழங்கு பீட்றூட்கிழங்கு, கரட்வகைகள், செத்தல் மிளகாய், வாழைக்குலை போன்றவைகளும் தனியார் முகவர்களால் கொள்வனவு செய்யப்பட்டு கொழும்புக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது.

விவசாயிகள் தாமாகவே நேரடியாகவும் தனியார் வாகனங்கள் மூலம் கொழும்புக்கு கொண்டுசென்று வர்த்தகம் செய்ததும் உண்டு.

## செய்தி மடல்

அக்காலத்தில் விவசாயிகள் வாழ்க்கைத்தரம் உயர்ந்து புதியபுதிய வீடுகள் கட்டப்பட்டும், காணிகள் வாங்கி விவசாயச் செய்கை பெருகுவதற்கும் வாய்ப்பாக இருந்தது.

இன்று அந்த நிலைமாறி விவசாயிகள் தமது உற்பத்திகளைக் கீரைவிலைக்கே விற்கின்ற துர்ப்பாக்கிய நிலை உருவாகியுள்ளது. இதனால் விவசாயிகளின் உற்பத்தி மட்டுப்படுத்தப்பட்டு அவர்களின் வாழ்க்கைத்தரமும் கட்டுப்பாட்டுக்குள் வாழ வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

ஏன், முன்னர் விவசாயம் செய்த பொன்விளையும் பூமிகளின் பல பகுதிகள் இன்று செய்கை பண்ணப்படாத தரிசு நிலங்களாக மாறும் நிலையும் உருவாகியுள்ளது.

ஏக்கர் கணக்கில் செய்கை பண்ணப்பட்ட வாழைச் செய்கை கூட போதிய சந்தைப்படுத்தலின்மையால் கிலோ 5 ரூபாக்கு விற்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காரணமாக சில விவசாயிகளால் கைவிடும் நிலையிலுள்ளது.

விவசாயிகள் தத்தமது அன்றைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவிலேயே மட்டான விவசாயச் செய்கையை மேற்கொண்டு வருவருவது குறிப்பிடத்தக்கது.

யாழ். மாவட்டத்தின் இதயம் போன்ற சுன்னாகம் சந்தை இன்று தூங்கிக் கிடக்கின்றது. மருதனார்மடம் சந்தையும் அதே நிலையில் தான் உள்ளது. இக்குறை நீங்கி சாதகமான நிலை எப்போது வரும் என ஏங்கிய நிலையிலேயே இன்று குடாநாட்டின் முதுகெலும்பான விவசாயிகள் வாழ்கின்றனர்.

''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்' என்ற வள்ளுவர் வாக்கிற்கமைய யாழ். மாவட்டத்தில் விவசாயம் வளர்ச்சியடையாத நிலையினால் ஏனைய கட்டடத் தொழில்களோ, கைத்தொழில்களோ குறிப்பிடக்கூடிய அளவுக்கு வளரமுடியாத நிலை நீடிக்கிறது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

நீர்வேலிச் செய்தியாளர்

## நாளை

வைகாசி - 20

புதன்கிழமை

திதி: நவமி

பின்னிரவு 12.47 வரை.

நட்சத்திரம்: உத்தரம்

முழுநாளும்

சுபநேரம் 04.22 - 05.55

ராகுகாலம்: 11.52 - 01.[illegible]

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

மாமனிதன் யாரெனில், தவிர்க்க முடியாததை துணிச்சலுடன் ஏற்றுக் கொள்வதோடு அதை விருப்பத்துடன் [illegible] மாமனிதன்.

- [illegible]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நிரந்தர நியமனம், சம்பளம் இதுவரை இல்லை

# சமுர்த்தி ஊக்குவிப்பாளர் பதவி விலக ஆலோசனை!

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ் மாவட்ட பிரதேச செயலகங்களில் (வடமராட்சி தவிர்ந்த) சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களாக நியமனம் பெற்ற 149 ஊக்குவிப்பாளர்களும் தமது நிரந்தர நியமனம் தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்படாதது குறித்தும்—

நியமனம் வழங்கப்பட்டு நான்கு மாதங்களாகியும் இதுவரை சம்பளம் எதுவும் வழங்கப்படாதது குறித்தும் விசனம் அடைந்து தமது பதவியையே ராஜினாமாச் செய்யும் நிலைக்கு உள்ளாகியிருப்பதாகத் தெரியவருகிறது.

நியமனங்கள் வழங்கிய அரச அதிபரும், நியமனங்களுக்கான பட்டியல்களைச் சமர்ப்பித்த தமிழ்க் கட்சியும் இதுவரை எந்த விதமான ஆக்க பூர்வமான நடவடிக்கையும் எடுக்காததை அடுத்தே சமுர்த்தி ஊக்குவிப்பாளர்கள் இந்த முடிவை எடுத்திருப்பதாக அறிய வருகின்றது.

இது குறித்து முடிவை எடுப்பதற்காக கடந்த வியாழக்கிழமை கொக்குவில் இந்துக்கல்லூரியில் சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டம் யாழ். அரச உயர் அதிகாரி ஒருவரின் தலையீட்டின் பேரில் நிறுத்தி வைக்கப்பட்டது.

வடமராட்சிப் பிரதேசத்தில் முதன்முதலாக சமுர்த்தி ஊக்குவிப்பாளர் நியமனங்களும், முகாமையாளர் நியமனங்களும் வழங்கப்பட்டன.

அதைத் தொடர்ந்து யாழ். குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் சமுர்த்தித் திட்டத்தை அறிமுகம் செய்யும் நோக்கில் சமுர்த்தி ஊக்குவிப்பாளர் நியமனங்கள் வழங்கப்பட்டன இதுவரை 149 பேருக்கு இவ்வாறு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆனால் வடமராட்சிப் பிரதேசத்தில் நியமிக்கப்பட்ட சமுர்த்தி ஊக்குப்பாளர்களுக்கும், முகாமையாளர்களுக்கும் நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டு நியமனம் பெற்ற காலத்தில் இருந்து சம்பளமும் வழங்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் நியமிக்கப்பட்ட சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களுக்கு நிரந்தர நியமனக் கடிதங்களோ அன்றி சம்பளமோ இதுவரை வழங்கப்படவில்லை. அதுமட்டுமின்றி சம்பளம் வழங்குவதற்கான ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவுமில்லை.

எனவே குடாநாட்டின் ஒரு பகுதியில் நியமிக்கப்பட்ட சமுர்த்தியாளர்கள் நிரந்தர நியமனத்தையும், சம்பளத்தையும் பெறும் வேளையில் ஏனைய பகுதியைச் சேர்ந்த சமுர்த்தியாளர்கள் நிரந்தர நியமனத்துக்காகவும், சம்பளத்துக்காகவும் ஏங்கித் தவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து அதிருப்தியுற்றே சமுர்த்தி ஊக்குவிப்பாளர்கள் தமது பதவியை ராஜினாமாச் செய்ய முன்வந்துள்ளனர்.

இவ்வாறு சமுர்த்தி ஊக்குவிப்பாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-7)

நெடுந்தீவில்

## இளைஞர் நலவாழ்வு நிலையம் அமைப்பு

நெடுந்தீவு, ஜூன் 2

நெடுந்தீவில் தீவக இளைஞர் நலவாழ்வு நிலையம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இந்நிலையத்தில் குடும்பம், கல்வி, தொழில், உளவியல், ஆன்மீகம் தொடர்பான விடயங்களில் வழிகாட்டல்களும் ஆலோசனைகளும் இலவசமாக வழங்கப்படும் என அதன் இயக்குநர் பி.எம்.ஜே. அன்ரனி தெரிவித்தார்.

பிரதம ஆலோசகர்களாக கலாநிதி சபா. ஜெயராசா முதுநிலை விரிவுரையாளர் ஞா. ம. செபஸ்தியாம்பிள்ளை, சட்டத்தரணி இரா. ஜெயசிங்கம், நெடுந்தீவு பங்குத்தந்தை, வைத்திய அதிகாரி ஆகியோர் கடமையாற்றுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-111)

## சர்வதேச சிறுவர் தின சுவரொட்டிப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 2

மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான வழக்கறிஞர் சங்கத்தின் சிறுவர் பிரிவு சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி நாடளாவிய ரீதியில், கட்டுரை, சுவரொட்டிப் போட்டிகளை நடத்தவுள்ளது.

12 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட பாடசாலை மாணவர்கள் இப்போட்டிகளில் பங்குபற்றலாம்.

சகல கட்டுரைகளும், சுவரொட்டிகளும் ஜூலை 31 ஆம் திகதிக்கு முன் 'அமைப்பாளர், மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான வழக்கறிஞர் சங்கம் 225 1/1, கொட்டா வீதி, கொழும்பு -08' என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

கட்டுரைகள் மாவட்ட ரீதியில் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் 3 கட்டுரைகள் இறுதிச் சுற்றுக்காக தெரிவு செய்யப்பட்டு அதில் வெற்றி பெறும் கட்டுரைகள் தெரிவு செய்யப்படும்.

மாவட்ட ரீதியாக தெரிவு செய்யப்படும் 200 சுவரொட்டிகள் ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் 3 ஆம் திகதி வரை நடைபெறும் கண்காட்சியில் பார்வைக்கு வைக்கப்படும். சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் தனித்தனியாக போட்டிகள் நடத்தப்பட்டு தெரிவுகள் தனித்தனியாக இடம்பெறும்.

(ஐ-5)

# கீழ்த்தரமான சினிமாப் பாடல்களை வரவேற்பதை, வாசிப்பதை தவிருங்கள்

## நாதஸ்வரக் கலைஞர்களிடம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூன் 2

"கீழ்த்தரமான எண்ணங்களை வளர்க்கக் கூடிய ஆபாசமான சினிமாப் பாடல்களை வரவேற்பதையும், அவற்றை வாசிப்பதையும் இசைக் கலைஞர்களும், நாதஸ்வரக் கலைஞர்களும் உடனடியாகநிறுத்தவேண்டும்

இலங்கை இசை வேளாளர் சங்கம் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேற்படி சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாதாந்த இசை நிகழ்வு இணுவில் இளந் தொண்டர் சபை மண்டபத்தில் நடைபெற்ற சமயமே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இந்த இசை நிகழ்வுக்கு தலைமை தாங்கி உரையாற்றிய எஸ். ஆர். ஞானசுந்தரம் மேற்படி வேண்டுகோளை முன்வைத்து உரையாற்றினார்.

அவர் கூறியதாவது:-

பாரம்பரியமான கர்நாடக சங்கீதம் என்றுமே அழியாத பெருஞ் சொத்தாக விளங்குகின்றது. இடையிடையே தோன்றும் டப்பா சங்கீதங்கள் கொஞ்ச நாள்களிலேயே மறைந்து விடுகின்றன. தமிழ் மக்களின் பாரம்பரிய சொத்தாகிய கர்நாடக இசையைக் கட்டி வளர்ப்பதற்காகவே இதுபோன்ற இசை நிகழ்வுகளையும் நாம் மாதந்தோறும் நடத்தி வருகின்றோம். இந் நிலையில் சமுதாயச் சீரழிவை ஏற்படுத்தும் விதத்தில் தயாரிக்கப்படும் சினிமாப் படங்களும், அவற்றில் வரும் ஆபாசமான பாடல்களும் எமக்கு ஒரு சவாலாக விளங்குகின்றன. இளம் சமுதாயத்தைக் கீழ்த்தரமான எண்ணங்களுக்கு இட்டுச் செல்லும் சினிமாப் பாடல்களுக்கு முற்றுப் புள்ளி வைத்தல் அவசியம். சகல இசைக் கலைஞர்களும், நாதஸ்வரக் கலைஞர்களும் இதற்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும். இப் பாடல்களை வரவேற்பதையோ, வாசிப்பதையோ உடன் நிறுத்த வேண்டும். இதன் மூலம் கர்நாடக சங்கீத மரபுகளைக் கட்டிக் காப்பதுடன் சமுதாய சீரழிவையும் தடுத்து நிறுத்தவும் எமது பங்களிப்பை வழங்க முடியும்"- என்றார்.

ஆபாசமான பாடல்களை வாசிப்பதை நிறுத்துவதென சகல கலைஞர்களும் உறுதிமொழி எடுக்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

மேற்படி இசை நிகழ்வில் இணுவில் கோ. இரத்தினகுமார் குழுவினரின் மங்கள வாத்திய இசைக் கச்சேரியும், யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பீட விரிவுரையாளர் [illegible] கர்நாடக இசைக் கச்சேரியும் இடம் பெற்றன.

(ஐ)

மாகாணசபைத் தேர்தல்:

## இள வயதினரை களத்தில் நிறுத்த ஐ. தே. க. முடிவு

கொழும்பு, ஜூன் 2

தெற்கில் நடைபெறவிருக்கும் மாகாண சபைத் தேர்தல்களில் ஐ. தே. க. இம்முறை இளம் வயதினரையே வேட்பாளர்களாகக் களத்தில் நிறுத்த நடவடிக்கை எடுத்துள்ளது. என்று ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச். எம். அஸ்வர் தெரிவித்தார்.

மாகாணசபை நிர்வாகங்களில் இளம் வயதிரை ஈடுபடுத்துவதன் மூலம் சிறந்த நிர்வாகத்தை மக்களுக்கு வழங்க முடியும் என்பதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

வேட்பாளர் தெரிவை வாலிப முன்னணி ஊடாக மேற்கொள்ளும் பணி தற் சமயம் நடைபெறுகிறது. அத்துடன் கூடுதலான தமிழ் வேட்பாளர்கள் ஐ. தே. க. சார்பில் இத்தேர்தலில் போட்டியிடவிரும்புகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

(ஐ-3)

## பல்கலை அனுமதிபெற விண்ணப்பிக்க கோரிக்கை

கொழும்பு, ஜூன் 2

1997 ஓகஸ்ட் மாதம் நடந்த ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி 1998 — 1999 ஆம் கல்வி ஆண்டுக்கு பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுவதற்கு தகுதியுடையோரிடமிருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க ஆகக் குறைந்த தகுதியாக 4 பாடங்களில் 180-க்கும் குறையாமல் புள்ளிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் செயலகத்தில் அல்லது அதனால் நியமிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 26ஆம் திகதியாகும்.

(ஐ-8)

## நீங்கள் வளர்க்கும்...

(ஏழாம் பக்கத் தொடர்)

சப்பை, சிறுநீரகம் போன்றவற்றில் அழற்சி உருவாகலாம். ரொக்ஸோபிளமோசிஸ் நோய் கர்ப்பிணிகளைப் பெரிதும் பாதிக்கும் குழந்தைகள் இறக்கலாம் அல்லது குருடு, செவிடு, நியூமோனியா, செங்கண்மாரி, மூளைக்காய்ச்சல் ஆகியவற்றுக்கு உள்ளாக்கலாம்.

நொக்ஸோ காரியாசில் எனப்படும் (Toxocariasis) நோயை உண்டாக்கும் வட்டப்புழுக்களின் முட்டைகள் நமது வாய்வழியாக சிறுகுடலை அடைந்து அங்கு பொரித்துக் குடும்பியாக மாறித் தசைகளை ஊடறுத்து ஈரல், சிறுநீரகம், நுரையிரல், மூளை, கண் போன்றவற்றுள் ஊர்ந்து திரியலாம். மூளையில் ஊர்ந்து திரியும்போது வலிப்பும் கண்ணுக்குள் ஊர்ந்து திரியும் போது விசித்திர பிம்பங்கள் தெரிதல், கண் சிவத்தல் போன்ற பல அசௌகரியங்கள் ஏற்படும். ரனியாசிஸ் எனப்படும்நோய் ஏற்படும் போது வயிற்றுக் கோளாறு, பசியின்மையும் சமிபாடின்மையும் குடல் அழற்சியும் ஏற்படும். நாயினால் மனிதர்களுக்கு மேற்கூறப்பட்ட பல்வேறு தீங்குகள் ஏற்படும் என்பதால் நாயை வளர்ப்பவர்கள் நாயின் விவரத்தையும், வளர்க்கும் இடத்தையும் தமது ஊராட்சிமன்றத்தில் பதிவு செய்யவேண்டும் என்ற விதிமுறை இருப்பினும் அவை உரிய முறையில் கடைப்பிடிக்கப்படுவதில்லை. அவற்றை வளர்ப்பவர்கள் விதிமுறைகளைக் கடைப்பிடித்து ஏனையவர்களின் நலன்களுக்கு உதவ வேண்டும்.

மிருகங்களின் சிறுநீர் யோனித் திரவங்களினாலும் மனிதர்களுக்கு நோய்கள் தொற்றலாம். லெப்ரோஸ்பைறோசிஸ்நோயைத்தோற்றுவிக்கும் Leptospira என்ற நோய்க்காரணி நோய்வாய்ப்பட்ட நாய், மாடு, பன்றி, எலிபோன்றவற்றின் சிறுநீருடன் வெளிவரும். மனித உடலில் உள்ள காயங்கள் அல்லது மென்சவ்வுகளில் சிறுநீர் சேரநேர்ந்தால் மனிதரும் இந்நோயால் பாதிக்கப்படுவார்கள். இவர்கள் ஆரம்பத்தில் அதீத [illegible] நோவும் மற்றும் வாந்தியால் அவதிப்படுவர். செங்கண்மாரி, இரத்தச் சோகை ஏற்படுவதுடன் சிறுநீரகம், ஈரல் என்பவற்றிலும் பாதிப்பும் நிகழலாம்.

தெள்ளுகளால் மிருகங்களுக்கு ஏற்படும் நோய்கள் மனிதருக்கும் தொற்றலாம். பிளேக் நோயினால் தாக்கப்பட்ட எலிகளைக் கடிக்கும் தெள்ளு எம்மிடமும் தம் கைவரிசையைக் காட்டும். மூன்று வகையான பிளேக் நோயில், சுவாசப்பையில் தொற்று ஏற்படுத்தும் பிளேக் பயங்கரமானது.

### காய்ச்சிய பாலையே அருந்துங்கள்

மாட்டுக்குச் காசநோய்த் தாக்கம் உண்டு. எனவே பாலைப் பச்சையாகக் குடிப்பதைத் தவிர்த்தல்வேண்டும். நன்றாகக் காய்ச்சிய பின்னரே அதனை அருந்த வேண்டும். மிருகங்களில் காணப்படும் நோயை நுளம்புகள் காவி வந்து எம்மிடத்திலே பரப்பிவிடும். Japanese Bencephalitis எனப்படும் மூளைக்காய்ச்சல் பன்றியில் இருந்து நுளம்பினால் நமக்குத் தரப்படுகிறது.

பறவைகளும் இதற்கு விதிவிலக்கல்ல. கிளி, லவ்பேட்ஸ் (Love Birds) போன்ற வீட்டில் வளர்க்கப்படும் பறவைகள் நோய்க் கிருமிகளின் தாக்கத்திற்குட்பட்டிருந்தால் அவற்றின் மலத்தில் கிருமிகள் காணப்படும். பறவைகளின் மலத்தினை அகற்றுபவர்களும் பறவைகளை முத்தமிடுபவர்களும் பாதிக்கப்படலாம். இவர்கள் சோம்பல், கைகால் உளைவு, காய்ச்சல், தலையிடி என்பவற்றால் அவஸ்தைப் படுவார்கள்.

நாம் வளர்க்கிறோம் என்பதால் மிருகங்கள் பறவைகளிடத்தில் அவதானமின்றிக் கொஞ்சிக் குலாவுவது அபாயமானது என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். ★

## மட்டுப்படுத்திய...

(ஏழாம் பக்கத் தொடர்)

விவசாயிகளின் நிலை உயர்ந்தால் தான் ஏனைய தொழில் வளமும் வளர்ச்சியுறும்.

எனவே, இந்த கஷ்டமான நிலைமாறி விவசாயிகள் தலை நிமிர்ந்து வாழவும் ஏனைய தொழிலாளிகள் தொழிலைச் சிறப்புடன் செய்து வாழவும் கூடிய நிலை எப்போது வரும் என ஏங்குகின்றனர்.

[110]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ராணுவத் தளபதி மற்றும் அதிகாரிக்கு எதிராக மினிபஸ் உரிமையாளர் வழக்கு

நெல்லியடி, ஜூன் 2

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், சட்டமா அதிபர், இராணுவத்தளபதி, பருத்தித்துறை இராணுவக் கட்டளை அதிகாரி ஆகியோருக்கு எதிராக நஷ்டஈடு கோரி கரவெட்டியைச் சேர்ந்த மார்க்அலெக்சாண்டர் அந்தோனி என்பவர் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

வழக்காளிக்குச் சொந்தமான மினி பஸ் 1996 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 23 ஆம் திகதி காங்கேசன்துறையிலிருந்து பருத்தித்துறைக்கு பயணிகளை ஏற்றியிறக்குவதற்காக பருத்தித்துறை இராணுவக்கட்டளை அதிகாரியின் பணிப்பின்பேரில் பயன்படுத்தப்பட்ட போது கண்ணிவெடியில் சிக்கி பலத்த சேதமடைந்தது.

குறித்த விபத்துக்குப்பின் இவ் வாகனத்தை சேவையில் ஈடுபடுத்த முடியாமையால் மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா வீதம் வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும் இது தொடர்பாக பல அரச அதிகாரிகளிடமும் முறையீடு செய்தும் நட்டஈடு கிடைக்காமையினாலே இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாகவும் மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த வாகனத்துக்கு ஏற்பட்ட சேதத்தை பழுது பார்ப்பதற்கு ஏற்படும் செலவையும், வாகனத்தை சேவையில் ஈடுபடுத்த முடியாத காரணத்தினால் ஏற்பட்ட இழப்பையும் இவ்வழக்கு முடியும் வரையான காலத்தில் ஏற்படும் இழப்பையும் அரசாங்கத்தைச் செலுத்தும்படி ஆணையிடுமாறு கோரியே இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வாகனம் பயணிகளை இறக்கிவிட்டு வரும் வேளை கண்ணிவெடியில் சிக்கிய போது இராணுவத்தைச் சேர்ந்த சாரதியும் நடத்துனருமே அதில் இருந்தனர் என்பதும் இருவரும் மரணமானார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

(அ-5-109)

## சமய சந்நிதிகளில்

சித்தங்கேணி ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த சனியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. உற்சவம் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறும்.

(ஐ-ரீ)

★ ★ ★

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 12ஆம் திகதி மாலை நற்கருணை விழாவும் மறுநாள் காலை திருநாள் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து தேர்ப்பவனியும், திருச்சுரூப ஆசீரும் இடம்பெறும். (ஐ-ரீ)

★ ★ ★

இருபாலை வேளாத்தோப்பு அருள் ஸ்ரீ மதுரை மகா முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 11 நாள்கள் உற்சவம் நடைபெறும்.

எதிர் வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை காலைதேர்த் திருவிழாவும், மறுதினம் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ஐ-30)

★ ★ ★

அச்சுவேலி நாவலம்பதி அருள்மிகு ஸ்ரீ காட்டுமலைக் கந்தசுவாமி கோயிலின் வருடாந்த உற்சவம் கடந்த 30 ஆம்திகதிசனிக்கிழமைகாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 26 தினங்கள் உற்சவம் நடைபெறும்.

எதிர் வரும் 22 ஆம் திகதி இரதோற்சவமும், மறுநாள் அமாவாசை தினம் தீர்த்தோற்சவமும், திருவூஞ்சலும்இடம் பெறும்.

மாவை கொல்லங்கலட்டி அருள்மிகு ஸ்ரீ வீரகத்திப்பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் நேற்று திங்கட்கிழமை பகல் 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 9 ஆம் திகதி பூரணை நன்னாளில் தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும்.

(ஐ-30)

★ ★ ★

அளவெட்டி கும்பழாவளை அருள் மிகு ஸ்ரீ பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும இடம் பெறும். (ஐ-30)

★ ★ ★

தொல்புரம் கொட்டடியம்பதி அருள்மிகு ஸ்ரீ ஆதிமுத்துமாரியம்மன் கோயிலின் வருடாந்த அலங்காரத்திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகியது.

எதிர் வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை பூரணை தினத்தன்று தேர்த் திருவிழாவும், மாலை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

அனலைதீவு ஸ்ரீஎழுமங்கை மனோன்மணிஅம்பாள்ஆலய மகோற்சவம் கடந்த 31ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறும் மஹோற்சவத்தில் இம்மாதம் 8 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 9 ஆம் திகதி தீர்த்தமும் நடைபெறவுள்ளன. (இ-5)


யா/ திருக்குடும்பக்கன்னியர் மடம்

2000 ஆம் ஆண்டுக்கான அனுமதி

கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம்
ஆகிய நான்கு பாடத்துறைகளுக்கும்
விண்ணப்பம் கோரப்படுகின்றன

விண்ணப்ப முடிவு திகதி 10-06-98

(56493) —அதிபர்



யாழ்ப்பாணம் வணிகர் கழக

அறிவித்தல்

எமது வணிகர் கழகத்தின் செயலாளர் பதவியை வகித்த திரு. சி. நமசிவாயம் அவர்கள் 30-05-98 இல் இருந்து சுகயீனம் காரணமாகத் தமது செயலாளர் பதவியை இராஜினாமாச் செய்துள்ளார். 30-05-98 இல் நடைபெற்ற விசேட நிர்வாகசபைக் கூட்டத்தில் அவரின் இராஜினாமா ஏற்றுக்கொள்ளப்பட்டது.

— யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

இல. 19, நவீனசந்தை,
யாழ்ப்பாணம். (சி/3904)


## அம்பலாந்துறை குளம் புனரமைப்பு

தென்மராட்சி, ஜூன் 2

மட்டுவில் சந்திரபுரம் கிராம மக்கள் விவசாயத் தேவைக்கு நீர்பெறும் அம்பலந்துறை குளம் 30 ஆயிரம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இதற்கான நிதி 'கெயர்' நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## குமுதினிப் படகு மீண்டும் சேவைக்கு!

யாழ்ப்பாணம், ஜூன் 2

நெடுந்தீவு, நயினாதீவு, ஊர்காவற்றுறை ஆகிய பகுதிகளுக்கு இடையே "குமுதினி" படகு விரைவில் சேவைக்கு விடப்படவுள்ளது.

பழுதடைந்த நிலையில் இருந்த இந்தப் படகைத் திருத்தி விரைவில் சேவையில் ஈடுபடுத்துமாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.டி.பி. அமைப்பின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோரியிருந்தார்.

திருத்தியமைக்கப்பட்ட அந்தப் படகு எதிர்வரும் திங்கட்கிழமை பரீட்சார்த்தமாக சேவையில் விடப்படும் என்றும் —

பின்னர் அடுத்த ஒரு வார காலத்தில் சேவை ஆரம்பிக்கப்படும் என்றும் — தெரிவிக்கப்பட்டது,

இந்தப் படகுச் சேவையை தினமும் இரு தடவைகள் நடத்துவது என்றும் —

ஒரு வழிக்கட்டணமாக இரண்டு ரூபா அறவிடுவது என்றும் — முடிவாகியுள்ளது. (ஐ-3-8)

## காலாவதியானகாசோலை; மாற்றுவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 2

பரீட்சைத் திணைக்களம் நடத்திய பரீட்சைகளில்மேற்பார்வையாளராக கடமையாற்றியவர்கள் தமது கொடுப்பனவுக்காக வழங்கப்பட்ட காசோலைகள் காலாவதியானாலும், அவற்றை தபாலகங்களில் வைப்பிலிட வசதி செய்யப்பட்டுள்ளது என்று யாழ். மாவட்டதபால் அத்தியட்சகர் எஸ். தர்மராஜன் தெரிவித்தார்.

பரீட்சை மேற்பார்வையாளர்கள் பரீட்சைத்திணைக்களத்தில் இருந்து கிடைக்கும் காசோலைகளை தபால் நிலையங்களில் வைப்பிட்டு, தமக்கு கீழ் பணியாற்றியவர்களுக்குமணியோடர்களை அனுப்புவது வழக்கம்.

தபால் ஊழியர் வேலை நிறுத்தம் காரணமாக தற்சமயம் பரீட்சை மேற்பார்வையாளர்கள்காலாவதியான காசோலைகளைப் பெற்றுள்ளனர்.

இந்தக் காலாவதியான காசோலைகளையே தபாலகங்களில்வைப்பிலிட்டு மணியோடர்களைப்பெறஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### கிராம சேவகருக்கான

## நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றத் தவறியோருக்கு மீண்டும் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 2

கடந்த ஜனவரி மாதத்தில் நடத்தப்பட்ட கிராம சேவகர்கள் தெரிவுக்கான நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்ளத்தவறியவர்களுக்கு மீண்டும் ஒரு நேர்முகப் பரீட்சையை நடத்துமாறு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு யாழ். செயலகத்தைக் கேட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்த 39 பேரில் 21 பேரே நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர் அதனை அடுத்தே நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றாத ஏனையவர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடத்துமாறு கேட்கப்பட்டுள்ளது.

கே. தரராஜ சுந்தரம், வி. பிரபாகரன், ரீ. சிவகணேசன், செல்வி எஸ். மைதிலி, வி. வடிவழகையன், வி. வரதராஜா, எம். பிரபாகரன், எஸ். சந்திரசேகர், எ. அதிசயராஜா, பி. சிவகுமார், எஸ். நவரட்ணம், எஸ். சூரியகுமார், செல்வி வை. நாகராஜா, எஸ். அகிலன், எஸ். சிவஞானம், எஸ். நந்தகுமார், ஆர். ரகுபதி, எம். சுகந்தன் ஆகிய 18 பேருமே தற்போது நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை அழைப்புக் கடிதங்கள் காலம், நேரம் என்பன குறிக்கப்பட்டு பின்னர் அனுப்பி வைக்கப்படும் என்று செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையில் ஜனவரி மாதத்தில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கான நியமனங்கள் தொடர்பான கடிதங்கள் விரைவில் அனுப்பி வைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-6)

## வார இறுதியில் நிவாரணப் பொருள்கள்

அரியாலை, ஜூன் 2

இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கான 62 ஆவது 'ஏ' 'பீ' உலர் உணவு முத்திரைப் புள்ளிகளுக்கான உணவுப் பொருள் விநியோகம் இவ் வார இறுதிக்குள் ஆரம்பமாகவுள்ளது.

உணவுப் பொருள்களை விநியோகிக்கும் பொருட்டு யாழ். செயலக புனர்வாழ்வு பகுதி பலநோக்கு கூட்டுறவு சங்கங்களுக்கு உணவுப் பொருள்களை வழங்கி வருகின்றது.

இதனை அடுத்து சங்கங்கள் இவ்வார இறுதிக்குள் உணவுப் பொருள்களை இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

அரிசி, [illegible] பால்மா என்பன நிவாரணப் பொருள்களில் அடங்கியுள்ளன. (ஐ-17)

## தொழில் திறன் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூன் 2

கல்வி வலயம் ஒன்றின் கீழ் உள்ள 20 பாடசாலைகளில் பாடசாலைக் கல்வியை முடித்துக்கொண்ட இளைஞர்கள், யுவதிகளுக்கான தொழிற்றிறன் பயிற்சி நெறிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

வலயம் ஒன்றைச் சேர்ந்த முறைசாராக் கல்விப்பிரிவினரின் ஏற்பாட்டிலேயே இப் பயிற்சி நெறிகள் நடத்தப்படுகின்றன.

உடையமைத்தல், சுருக்கெழுத்து, தட்டெழுத்து (தமிழ், ஆங்கிலம்) வீட்டு மின் இணைப்பு, அலங்காரப் பொருள் உற்பத்தி, மோட்டார் பொறியியல், மனையியற் கலை பாடசாலை செல்லாத மாணவர்களின் நன்மை கருதி எழுத்தறிவூட்டல் என்பன இத் தொழிற்றிறன் காண் பயிற்சி நெறியில் போதிக்கப்படுகின்றன.

## கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூன் 2

கல்வி வலயம் ஒன்றுக்கு உட்பட்ட பாடசாலைகளிடையே எதிர்வரும் ஜூலை மாதம் 29 ஆம் திகதி ஓவியக் கண்காட்சி ஒன்று நடத்தப்படவுள்ளது.

இக்கண்காட்சி தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 10 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணியளவில் நல்லூர் விக்கினேஸ்வராக் கல்லூரியில் நடைபெறும்.

இக்கலந்துரையாடலில் வலயம் ஒன்று பாடசாலைகளைச் சேர்ந்த சித்திரப் பாட ஆசிரியர்கள் கலந்து கொள்வர். (இ-7)

## கருத்தரங்கு

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் நடத்தும் ஜி. சீ. ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான சுவாமி விவேகானந்தர் பற்றிய கருத்தரங்கு நாளை புதன்கிழமை பிற்பகல் 1-20 மணிக்குப் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியில் அதிபர் தலைமையில் நடைபெறும்.

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம செயலாளர் சுவாமி சித்ரூபானந்தா கருத்தரங்கில் உரையாற்றுவார்.

## முறைசாரா கல்விப் பயிற்சி பரீட்சை முடிவு

வலயம் ஒன்றைச் சேர்ந்த பாடசாலைகளில் கடந்த வருடம் நடத்தப்பட்ட முறைசாராக் கல்விப்பயிற்சி நெறியின் இறுதிப் பரீட்சை முடிவுகள் அடுத்த வார முற்பகுதியில் வெளியிடப்படவுள்ளன.

பரீட்சார்த்திகள் தாம் பயிற்சி பெற்ற பாடசாலை அதிபர்களிடம் தமது பரீட்சை முடிவுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என வலயம் ஒன்றின் கல்வி அபிவிருத்தித் திட்டமிடல் உதவியாளர் அறிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓட்டோக்களுக்கான கட்டணம் விரைவில் நிர்ணயிக்கப்படும்

யாழ்ப்பாணம், ஜூன் 2
யாழ்ப்பாணத்தில் பிரயாணசேவையில் ஈடுபடும் ஓட்டோக்களுக்கான பொதுவான பிரயாணக் கட்டணம் விரைவில் நிர்ணயிக்கப் படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை வடபிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்தி சேவைச்சங்கம் மேற்கொண்டு வருகிறது.

பொதுமக்களுக்குத் திருப்தியான பிரயாண சேவையை வழங்கும்பொருட்டு ஓட்டோ உரிமையாளர்களை உள்ளடக்கி இந்தச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. இச்சங்கத்தில் 71 பேர் அங்கத்தவர்களாக இருக்கிறார்கள்.

ஓட்டோ சாரதிகள் பிரயாணிகளிடமிருந்து வாங்கும் பிரயாண கட்டணம் சம்பந்தமாக பொதுமக்களிடமிருந்து கிடைத்த முறைப்பாடுகளையடுத்தே பொதுவான பிரயாண கட்டண நிர்ணயம் பற்றி ஆலோசிக்கப்பட்டு வருவதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

சங்க அலுவலகத்துக்கான கட்டட வசதி ஒன்றை ஏற்படுத்தித் தருமாறும் ஓட்டோக்களுக்கான பொதுவான தரிப்பிடம் ஒன்றை ஒதுக்கித்தருமாறும் மேற்படி சங்கம் யாழ். மாநகர சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் நூற்றுக்கும் அதிகமான ஓட்டோக்கள் சேவையில் ஈடுபடுகின்றபோதும் 71 ஓட்டோக்களே சங்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. (இ-5)

## ஜன்னல் "கிறில்" கள் வைத்திருந்தாரராம்

### இளைஞருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜூன் 2
வீட்டு ஜன்னல் ''கிறில்'' கள் வைத்திருந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்ட இளைஞர் ஒருவருக்கு மல்லாகம் நீதிமன்ற நீதிவானால் 5 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட 6 மாத சடுழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

17 வீட்டு ஜன்னல் கிறில்கள் வைத்திருந்ததாகச் சுன்னாகம் பொலீஸாரினால் கைது செய்யப்பட்ட நவரத்தினம் ஜெயராசா என்பவர் நேற்று மல்லாகம் நீதிமன்ற நீதிவான் மு. திருநாவுக்கரசு முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப் பட்டார்.

இவ்வழக்கை விசாரித்த நீதிவான் களவெடுப்பது போல் திருட்டுப் பொருள்களையும் தம்வசம் வைத்திருப்பது குற்றமெனக் கூறி 17 வீட்டுக் கிறில்களையும் பறிமுதல் செய்ததுடன் மேற்குறிப்பிட்ட தீர்ப்பையும் வழங்கினார். (இ-5)

மங்கள வைபவங்களுக்கேற்ற
பட்டுப் புடைவைகளா?
இதோ!
மகாநதியில்
இந்தியாவில் இருந்து பிரத்தியேகமாக
இறக்குமதி செய்யப்பட்ட
சுப முகூர்த்தப் பட்டுப் புடைவைகளும்
'BEST WAIST' டெனிம் ஜீன்ஸ் வகைகளும்
மற்றும்
விதவிதமான வாணங்களில் பற்பல தெரிவுகளுக்கும் சகல விதமான றேடிமெட் ஆடைகளுக்கும்
மகாநதி
புடைவை அகம்
(முகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்கு
அதிர்ஷ்டமான இடம்)
4, நவீன சந்தை, சாவகச்சேரி.
16, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(சி/3899)

எடிசன் அக்கடமி
K K.S றோட் — யாழ்ப்பாணம்
வைமன் றோட் — நல்லூர்
K. K. S. றோட் — கொக்குவில்
மூன்று நிறுவனத்திலும்
O/L DAY CLASSES
கணிதம்: திரு. B. P. பாஸ்கரன்
அனைத்துப் பாடங்களும் திறமைமிகு ஆசிரியர்களால்
ஆரம்பம்: 05 - 06 - 98 வெள்ளி 8 மணி
(56502)

## கண்ணீர்ப் பூக்கள்

திருமதி
**நாகேஸ்வரி சந்திரசேகரம்**
(ஓய்வு பெற்ற ஆசிரியை)

ஈச்சமோட்டையைச் சேர்ந்த திருமதி நாகேஸ்வரி சந்திரசேகரம் எமது ஆலயத்தின் திருப்பணி வேலைகளுக்கு பெரும் உதவியளித்துள்ளார். அவரின் திடீர் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த அதிர்ச்சி கொண்டுள்ளோம். அவரின் ஆத்மா சாந்தியடைய வதரிபீட விநாயகனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலன சபையினர்,
வதரிபீட-விநாயகர் ஆலயம்,
கொழும்புத்துறை மேற்கு.

(சி/3897)

### வலி. வடக்கு ..

(முதலாம் பக்கத் தொடர்)
விடுதலைக் கூட்டணியின் தலைமைப் பீடத்துக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

தமது கோரிக்கைகள் நிறைவேற நான்கு மாத கால அவகாசம் அவர் வழங்கி உள்ளார்.

யுத்தம் காரணமாக மக்கள் பெரும் இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். எனவே யுத்தம் நிறுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும் எனவும் அவர் வற்புறுத்தியுள்ளார்.

அவரின் நிபந்தனைகள் குறித்துக் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் குழு ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வரும் எனக் கூட்டணி வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன. (இ-21-9)

INSTITUTE OF INFORMATICS STUDIES
புலமைப்பரிசில்'98
புலமைப்பரிசில் '98 க்கு உரிய முடிவுகள் 01-06-98 இல் வெளியிடப்பட்டுள்ளன. இதில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்குரிய அனுமதிக் கடிதங்கள் யாவும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. புலமைப் பரிசில் பெற்றுக்கொண்ட மாணவர்களுக்குரிய அறிமுகக் கூட்டம் 06 - 06 - 98 (சனிக்கிழமை) மு.ப.11.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் இடம்பெறும்.
★ மேலதிக விவரங்கள் அலுவலகத்தில்
— Director
(சி/3902)

குருநகர் சம்பவம்:

## ஈ. பி. ஆர். எல். எவ். கண்டனம்தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 2
கடந்த சனிக்கிழமை மாலை குருநகரில் இடம்பெற்ற சம்பவங்களைக் கண்டித்து ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

குருநகர் பகுதியில் நடந்த மோதலை அடுத்து அப்பாவிப் பொது மக்கள் பாதிப்புக்குள்ளானதை ஈ. பி. ஆர். எல். எவ். வன்மையாகக் கண்டிக்கின்றது.

யுத்தம் புரிபவர்கள் தமது துன்பங்களில் சாதாரணமாக இடையில் அகப்படும் மக்களை கவனத்தில் எடுப்பதே இல்லை.

இத்தகைய சம்பவங்களும் தான் இனப்பிரச்சினையை இந்தளவு தூரத்திற்கு இட்டுச் சென்றுள்ளன.

1995 இல் இடம்பெற்ற பாரிய இடம்பெயர்வின்பின்னர் கௌரவமான தீர்வு, சமாதானம், நிம்மதியான வாழ்வு ஆகியவையே மக்களின் விருப்பமாக இருந்தது.

இந்தமாதிரியான சம்பவங்கள் அந்த நம்பிக்கைகளை சிதறடிப்பனவாகும்.

ஆனால் தற்போது ஆங்காங்கே நடைபெறும் சம்பவங்களினால் பொதுமக்கள் காயமடைவது அல்லதுமரணமடைவது விசனத்தை ஏற்படுத்துவதாகவே அமைகின்றது.

ஆத்திரமூட்டல் மூலம் பொதுமக்க்ள் பலியாவதற்கான சூழலை உருவாக்க வேண்டாமென்றும், ஆத்திரப்படுபவர்கள் பொதுமக்கள் மீது தமது வஞ்சத்தை தீர்த்துக் கொள்ள வேண்டாமெனவும் ஈ. பி. ஆர். எல். எவ். கேட்டுக் கொள்கின்றது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

### படையினர்...

( முதலாம் பக்கத் தொடர் )
இவ்வழக்கில் எதிரிகளான இராணுவத்தைச் சேர்ந்த சூரிய ஆராய்ச்சி லாககே சமல்குமார, குருநகே அத்துல குமாரபெரோ ஆகியோரின் சார்பில் ஆஜராகும் சட்டத்தரணிகள் இன்றைய வழக்குக்கு சமுகமளிக்க முடியாதிருப்பதாக அறிவித்திருந்தனர்.

இதனையடுத்து நீதிவான் இவ்வழக்கினை ஜூன் 15ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

### களுவாஞ்சிக்குடி...

[முதலாம் பக்கத் தொடர்]
மாறு உத்தரவிட்டார்.

இதேவேளை இக் குண்டு வெடிப்புச்சம்பவம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு நேற்று வெளியிட்ட அறிக்கையில் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றபோது அன்று கடமையில் இருக்க வேண்டிய காவலாளிகள் இருவரும் தனது வேலைப் பதிவுப் புத்தகத்தில் கையொப்பத்தை இட்டு விட்டு வெளியேறிவிட்டனர் எனவும் —

இதனாலேயே இனந் தெரியாத நபர்களினால் இலகுவாக குண்டை வெடிக்க வைக்க முடிந்தது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### காணாமற்போனோர்...

(முதலாம் பக்கத் தொடர்)
காவல் படையினர் சடலங்களாக மீட்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

நேற்றுக்காலை தேடுதல்களில் ஈடுபட்ட படையினர் இருசடலங்களையும் மீட்டனர்.

விடுதலைப்புலிகளினால் இருவரது ஆயுதங்களும் எடுத்துச் செல்லப்பட்டன. (இ-21)

### வன்னியில்-..

(முதலாம் பக்கத் தொடர்)
சண்டை நடத்தி வந்தனர். இவர்களுக்குத் துணையாக விமானப்படையினரும், பீரங்கிப் படையினரும் தாக்குதலை நடத்தி வந்தனர்.

விடுதலைப் புலிகளும் ஆட்டிலறி மற்றும் மோட்டார்களைக் கொண்டு படையினரின் நகர்வைத் தடுப்பதில் ஈடுபட்டு வந்தனர்.

அதேவேளை கடந்த வியாழக்கிழமை அதிகாலை ஆரம்பமான படை நகர்வு நேற்றுடன் தற்காலிகமாக நிறுத்தப்பட்டதாகவும்

புதிய படை நகர்வை மேற்கொள்வதற்காகப் படையினர் புதிய வியூகங்களை வகுத்து வருவதாகவும் — செய்தி ஏஜென்சி ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

எனினும் நேற்றுப் பெரிய அளவிலான சண்டைகள் நடைபெற்றதுக்கான அறிகுறிகள் எதுவும் தெரியாத போதிலும் இருதரப்பினரும் பரஸ்பரம் ஷெல் வீச்சுக்களில் ஈடுபட்டார்கள் என வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-9)

நிரு ரியூசன் சென்ரர்
கோண்டாவில்.
O/L DAY CLASS - 1998
''வழமையான ஆசிரியர் குழு''
01 - 06 - 1998 இல் ஆரம்பமாகி விட்டது.
(55425)

இதோ வடமராட்சியில்!
அதி சிறந்த தமிழ் விளக்கத்துடன்
மிக இலகுவான முறையில்
SPECIAL ENGLISH CLASS
Modern Education Centre
(வட இந்து பாடசாலை அருகில்)
புதிய பிரிவுகள் ஆரம்பம்: 07-06-1998
நேரம்: ( 3 — 4 P. m. )
✶ O/L, A/L எடுத்தவர்கள் உள்வாரி / வெளிவாரி பல்கலைக்கழக மாணவர்கள், வேலைசெய்வோருக்கான உயர்தர ஆங்கிலம்
பிரபல ஆசிரியர்:
B. JOTHY [ B. Com. (Hons) ]
ஒவ்வொரு பிரிவிலும் குறித்த தொகை மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். அனுமதிக்கு முந்துங்கள்!
(56500)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02 -06-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org